Regd No. M. 4900.    16 பக்கங்கள்.    தனிப்பிரதி விலை 0-2-0.

# குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0.   வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21    ஈரோடு    13-12-1947    சனிக்கிழமை    மலர் 14.

## கொசுவின் அறிவுரை!

நாரா நாச்சியப்பன்

★

கொசுவே! கொசுவே! கொடுஞ்செயற் கொசுவே!
மக்களைக் கொட்டி மற்றவர் குருதியைக்
குடித்துப் போகும் கொடுஞ்செயற் கொசுவே!
ஒருவர்தம் நோயை ஊரெலாம் பரப்பித்
திரிந்து வாழும் தீச் செயற் கொசுவே!
நன்மைகள் ஒன்றும் நல்காய் ஆயினும்
தீமையை யேனும் தீர்த்தால் என்ன?
என்றதும் சினத்தால் எரிபோற் கனன்று
கொசுவும் சீற்றம் கொண்டிது சொல்லும்,
ஏடா மனிதனாம் இழிகுலத் தவனே!
எள்ளள வறிவும் இல்லாச் சிறியோய்!
உன்னைநான் கொட்டுவ துண்மைஎன் றாலும்
என்னினம் தன்னை யான்பகைப்ப தில்லை.
உன்னினம் நோய்ப்பட உதவுவேன் எனினும்
என்னினத்தைநான் எதிர்ப்பதே இல்லை.
வர்ணமும் சாதியும் வகுத்துப் பேசி
ஒருவரை ஒருவர் ஒட்டாண்டி யாக்கி,
அகிம்சையே வேண்டுமென் றலறுவ தில்லை
தாழ்வுயர் வென்னும் தன்மையும் இல்லை.
பாப்பான் குருதியும் பறையன் குருதியும்
மேலை நாட்டான் கீழை நாட்டான்
யாவர் குருதியும் அஞ்சுவை தந்து
செம்மை யாய்த்தோன்றிச் சேர்ந்ததென் வயிற்றுள்
பேத மில்லை பேத மில்லை
குருதியில் ஏதும் பேதமில்லை!
ஆகலின் மனிதனாம் அறிவிலாப் பேதாய்!
தேகத்தில் குருதியில் பேதமே யில்லாப்
போதில் நீயேன் பொய்க்குலம் புகுத்தினை?
கேளிது தண்டனை கெட்டநின் செயல்கட்(கு)
என்றெனைக் கொட்டி இன்னிசை எழுப்பிச்
சென்றது கொசுஎன் சிந்தையைத்திருத்தியே!

பெண்கள் பகுதி:

# மன வேதனையில்லா வாழ்க்கை.

[தூத்துக்குடி தோழியர் எஸ். என். ராஜபுஷ்பம்]

"பெண்களே பெண்களுக்கு உதவி" என்ற தலைப்பில், பெண்களே தங்களின் குடும்ப வாழ்க்கைக்கு ஏற்ற கணவனைத் தேர்ந்தெடுக்க வேண்டுமேயொழிய, அது பெற்றோர்களின் வேலையாக இருத்தல் கூடாது என்ற கருத்துடன் 29-11-47 ம் நாள் குடி அரசில் எழுதியிருந்தேன்.

அதைப் படித்துப் பார்த்த எங்களின் பக்கத்து வீட்டு சரோஜா, என்னிடம் ஓடி வந்து, கோபக்குறி விளங்கிய முகத்துடன், என்டி புஷ்பம்! இவ்விதம் அதிகப் பிரசங்கித் தனமாக எழுதியிருக்கிறாயே, குழந்தையைப் பெற்றவர்கள் பிள்ளைக்குத் துரோகமா செய்வார்கள்? குழந்தைகளைப் பெற்றது பாழுங்கிணற்றில் தள்ளவா? என்ன இருந்தாலும் நீ இவ்விதம் எழுதியிருக்கக் கூடாது. இது கடவுளுக்கும் அடுக்காது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று நீ படித்ததையெல்லாம் இப்பொழுது மறந்து, இவ்விதம் எழுதுகிறாய் என்று என்னென்னெல்லாமோ கடிந்துரைத்துவிட்டுச் சென்றார்கள்.

இந்தமுறை தவறு என்று என்னைக் கடிந்துரைத்த, சரோஜாவைப்போன்ற இதரப் பெண்களுக்கும் விளக்கிச் சொல்லத்தான் வேண்டும். பெற்றோர்களிலே பலரகம் உண்டு. அந்த ரகங்களில் இரண்டைமட்டும் இங்கு குறிப்பிடுகின்றேன்.

ஒரு குடும்பஸ்தரைப் பார்த்து, அவருக்குப் பழக்கப்பட்ட இன்னொருவர், என்னய்யா! எப்போது பார்த்தாலும் பெருங் கவலையாகத் தென்படுகிறீர்களே, அப்படி என்ன நடந்துவிட்டது? எனக் கேட்பார். அதற்கவர், ஒன்றுமில்லய்யா, ஏதோ ஆண்டவன் கிருபையால் சாப்பாட்டிற்கு ஒன்றும் குறைச்சலில்லை. என் மகள் வனிதா பருவமடைந்து ஆறு வருடங்கள் ஆகின்றன. இன்னும் விவாகமாகவில்லை. குழந்தையும் உருகிக்கொண்டே போகின்றது. என் மனைவியின் உபத்திரவமும் தாங்கமுடியவில்லை, குழந்தைக்கு விவாகமாகாத குறையினால். அந்குழந்தையைக் காலாகாலத்தில் எவன் கையிலாவது பிடித்துக் கொடுத்துவிட வேண்டும் என்று நானும் அஞ்சு வருஷமாப் படாதபாடு படுறேன், ஆனால் திருந்தவரன் அகப்படவில்லை. உங்களுக்குத் தெரிந்த பிள்ளையாண்டானா ஏதோ நான்கு வேலி இருந்தாக்கூடப் போதும், எங்கேயாவது இருந்தால் பாருங்களேன். உங்களுக்கும் கோடிப் புண்ணியமுண்டு, என் கவலையும் ஒழிந்து நிம்மதியா வாழ்வேன் என்று கூறுவார்.

விவாகமாகி ஒன்பது வருஷமாகியும் பிள்ளை இல்லாத குறை பெருங் குறையாக இருந்தது. பக்கத்து வீட்டுப் பெண்களெல்லாம், என் மனைவிக்குப் பிள்ளை பிறக்காத காரணத்தால் என்னென்னெல்லாமோ சாடை சொல்லி வைவார்களாம். அதையெல்லாம் அவள் என்னிடம் கூறி அழுவாள். என் செய்வது? நம் முன்னோர்கள் செய்த பாவம், நாம் குழந்தையில்லாமல் கஷ்டப்படுகிறோம்; அதற்கு நாமென்ன செய்யலாம்; எல்லாம் அவன் செயல் எனக்கூறி என் மனைவியைத் தேற்றுவேன்; எவ்வளவு நாளைக்குத்தான் இவ்விதம் ஆறுதல் சொல்லிக்கொண்டிருப்பது; மனம் கேட்கவில்லை; போகாத கோவில்கள் எல்லாம் போனோம்; அடிக்காத மொட்டைகளெல்லாம் அடித்தோம்; சுப்பிரமணியர் வெள்ளி உருவச் சிலை கூட திருச்செந்தூர் கோவிலுக்கு அடித்து வைத்தோம்; இப்படியே எங்கள் பணமும் பாழாகிப் பலமும் குறைந்து கொண்டே வந்தது. இப்படியெல்லாம் சோதிச்சு விட்டுக் கடைசியில் சுப்பிரமணியர் கிருபையால் ஒரு பெண் குழந்தை பிறந்தது; வளர்ந்து பருவமடைந்தது. இப்பொழுதோ, அப்பிள்ளை எங்களுக்குப் பெரும் பாரமாகப் போய் விட்டது, பெண் கேட்க வருபவர்களெல்லாம் ஆயிரம் இரண்டாயிரத்திற்கு நகை போடவேண்டும் எனக் கேட்கிறார்கள். என்டாப்பா குழந்தையைப் பெற்றோம் என்றாகி விட்டது எனக்கூறுகின்ற பெற்றோருமுண்டு. இதைப் போன்ற, கவலை எதற்காக உண்டாக வேண்டும்?

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்து அருமையாக வளர்த்து, கண்ணை இமை காப்பது போல் காப்பாற்றி வந்த தன் மகளை, பாழும் கிணற்றில் தள்ளுகிறோம் என்று சொல்லி எந்தப் பெற்றோரும் செய்துவிட மாட்டார்கள் என்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். தன் மகள், மாட மாளிகைகளில் உலாவவேண்டும்; பஞ்சணை மெத்தையில் படுத்துறங்கவேண்டும்; விலையுயர்ந்த, ஆடை ஆபணங்களை அணியவேண்டும்; தன் மகளுக்குவரும் வரன் நல்ல அழகுடையவனாக இருத்தல் வேண்டும் என்றெல்லாம் எண்ணுவார்கள். அதன்படியே காரியாம்சத்தில் சிலர் செய்தும் முடிப்பர் என்பதும் உண்மையே.

ஆனால் ஒரு பெண்ணின் வாழ்க்கையை வளமாக்குவது, இன்பகரமாகச் செய்வது மாடமாளிகைகளா? கூடகோபுரங்களா? ஆடை ஆபணங்களா? அழகுடைய ஆடவனா? அல்லவே. இவை மனமொத்த குடும்ப வாழ்க்கைக்கு ஏற்றுக்கொள்ளவும் செய்யாதே. எது எப்பேர்ப்பட்ட அழகு வாய்ந்ததாக இருந்தாலும் ஒரு பெண்ணின் குடும்ப வாழ்க்கைக்கு அத்தியாவசியமாக வேண்டியது, ஆடவருடைய உள்ளம் அல்லவா அழகு வாய்ந்ததாக இருத்தல் வேண்டும். அப்பேர்ப்பட்ட உள்ளத்தின் அழகை நிர்ணயிப்பதற்கு, அந்த ஆடவனை அடையப் போகும் பெண்ணல்லவா பரிசீலனை செய்ய வேண்டும். பரிசீலனை செய்யப்பட்ட ஆடவனை அடையப்போவது பெண்ணே தவிரப், பெண்ணைப் பெற்ற தாய் தந்தையர்கள் அல்லவே. அதனால் தான் வேறு எதற்கும் பெற்றோர்களோ அல்லது அன்னியர்களோ ஆகியவர்களின் சிபார்சை ஏற்று நடந்தாலும், ஒரு பெண் தன் வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்தெடுக்கும் பணியில் வேறு எவரும் உதவி செய்யலாமே தவிர தலையிடக்கூடாது, கூடாது எனப் பன்முறை கூறுகிறேன். தலையிடுதல் நல்ல எண்ணத்தோடு கூடியதாக இருந்தாலும், அது தான் பெற்ற மகளைத் தானே கொலை செய்வதற்குச் சமமென்றும் சொல்வேன். கொலை என்றால்கூடப்பாதகமில்லை. ஒரே வீச்சில், அல்லது வேறு கருவியால் ஒரு நிமிஷத்தில் உயிர் உடலை விட்டுப் போய் விடும். ஆனால் இன்றையச் சமுதாயம் பெண்களை உயிரோடு வைத்துக் கொண்டே சித்திரவதை செய்கிறது. இதனால் தான் இவ்வித இன்னல்களிலிருந்து விடுபட குடும்பச் சிறையில் அடைபட்டுக் கிடக்கும் ஒரு மாபாதகச் செயல் ஒழிய வேண்டும்—ஒழிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறேன்.

பருவமடைவதற்கான அறிகுறிகளைக் கண்டவுடனேயே, வீட்டிற்குள் அடைத்து வைத்து, உண்மையான வெளியுலகைக்காண முடியாதவாறு செய்கிற சிறையிலிருந்து விடுத

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

### காட்சி 8.

[மிதிலையில் ஜனகராஜனது நந்தவனம். வருத்தம் தேங்கிய தோற்றத்தோடு சீதை வீற்றிருக்கப்,பக்கத்தில் தோழிமைலியும் இருக்கின்றாள்]


**சீதை:-** அடி தோழி மைலி! என் வாழ் நாள் இப்படியே போக வேண்டியது தானா? என்னால் என் தந்தையும் எவ்வளவோ கஷ்டப் பட்டுப் பார்த்து விட்டுக் கடைசியில் நம்பிக்கை இழந்து துக்கத்தில் ஆழ்ந்து விட்டார். நான் தற்கொலை செய்து கொள்ள வேண்டியதுதான் பாக்கி.

**மைலி:-** சீதா! ஏனம்மா இப்படிப் பிரலாபிக்கிறாய்? உனக்கென்னம்மா குறை? நீ எங்கு பிறந்தாயோ? எப்படிப் பிறந்தாயோ? அப்படியெல்லாமிருந்தும் மகாராஜா உன்னிடம் எவ்வளவு அன்பாக இருக்கின்றார்? உனக்குக் கணவனைத் தேடுவதில் எவ்வளவு கஷ்டப்படுகிறார்? பொறு, பொறு. காரியம் நடக்கும்.

**சீதை:-** எப்பொழுதடி காரியம் நடக்கப்போகின்றது? நான் பக்குவமடைந்து 15 வருடத்திற்கு மேலாகி விட்டது.

**மைலி:-** ஆனால் என்ன? நீ காட்டில் புழுதியில் புரண்டு, இரத்தம் தோய்ந்து கிடந்தவள். மகாராஜா உன்னைக் கண்டெடுத்து வந்து வளர்த்தார்கள்; இது உலகமெல்லாம் தெரிந்து விட்டது. உன் பிறப்பில் சந்தேகம் கொண்டு, நற்குடிப்பிறந்தோர் யாரும் உன்னை மணக்க இஷ்டப்படவில்லை. "அதற்கு என்ன செய்வது? நம் யோக்கியதைக்குத் தகுந்தவன்-தான் கிடைப்பான். பிறப்பறியாத உனக்கு, உன் தந்தை பெருங்குடியில் வரன் தேடுகிறார். அது முடியுமா? யாரோ கேட்பவனுக்குக் கொடுப்பது என்று வந்தால் உன்னைப் போல் பிறப்பறியாதவன் அல்லது பிறவியில் குற்றமுடையவன் வருவான். ஆதலால் நீ மகாராஜாவுக்குச் சொல்லு. "யாருக்காவது ஒரு ஆளுக்கு என்னைக் கலியாணம் செய்து கொடுத்துவிடு, அப்பா. வருந்தாதே" என்று சொல்லு. அப்போதுதான் மகாராஜாவின் துயரம் நீங்கும்."

**சீதை:-** மைலி! நீ சொல்வது சரிதான், ஆனால் நான் இதை





மகாராஜாவிடம் எப்படியடி சொல்லட்டும்.

**மைலி:-** நான் சொல்லி விடுகிறேன்.

**சீதை:-** ஆமடி மைலி! தயவு செய்து அப்படிச் செய். மகாராஜாவுக்கும் என்னால் மனக் கஷ்டம். எனக்கும் எத்தனை நாளைக்கு இப்படி இருப்பது? இப்போதே எனது வாலிபமெல்லாம் பாழாய்ப் போய் விட்டது. பக்குவமடைந்து 15 வருடம் கழிந்து விட்டது. இனித்தானா நான் பெண்ணாய்ப் பிறந்ததின் பலனை அடையப்போகின்றேன்?

**மைலி:-** கவலைப்படாதே. இனிச் சீக்கிரம் காரியமாகிவிடும்.

[காட்சி முடிகிறது]




### காட்சி 9.

[ஜனக மகாராஜாவின் தர்பார்.]

**ஜனகன்:-** மந்திரிமார்களே! இந்தச் சீதையை எடுத்து வந்து வளர்த்ததால் என் குலத்துக்கு அபகீர்த்தி வந்து விட்டது. சீதையை எடுத்து வந்து கிட்டத்தட்ட 30 ஆண்டு ஆகிறது. இதில் அவள் பக்குவமடைந்து 15 ஆண்டாகிறது. இதுவரை யாரும் நாடி வந்துகேட்கவில்லை. இதனால் நம் குடும்பப் பெண்களுக்கும் வரன் வரவில்லை, ஏதாவது ஒரு சாக்கு வைத்து, யாருக்கானாலும் சீதையைக் கொடுத்து விடுவதாகப் பறையறைவியுங்கள். யாராவது வந்து மணந்து கொண்டு போகட்டும்.

(மந்திரிகள் ஒருவர்க்கொருவர் சிறிது பேசிக்கொண்ட பிறகு)

**தலைமை மந்திரி:-** மகாராஜாவே! இது நல்லயோசனைதான். சும்மா பெயருக்கு வில் ஒன்று செய்வது. இதை எவன் வளைத்து நாணேற்றுகிறானோ, அவனுக்குச் சீதையைக் கொடுப்பது என்று சொல்லி விடுவோம். எவனோ, வேடனோ? காடனோ? யாராவது வருவார்கள். காரியம் முடிந்து விடும். அரண்மனைக்கும் கெட்ட பெயர் போய் விடும். இப்போது சீதையம்மாளும் வீடு தங்குவதில்லை. மெத்தை மேடைகளிலும் நந்தவனங்களிலுமே திரிகிறார்கள். இனி நாம் இப்படி வைத்திருப்பது நீதியல்ல.

**ஜனகன்:-** அப்படியே செய்யுங்கள். [காட்சி முடிகிறது]

### காட்சி 10.

[பறை யடித்தல்]

மகாராஜா அவர்களின் தர்பார் மண்டபத்தில் இருக்கும் வில்லை எவன் வளைத்து நாண் ஏற்றுகிறானோ, அவனுக்கு மகாராஜா வீட்டில் வளர்க்கப்படும் சீதையைக் கல்யாணம் கட்டிக்கொடுக்கப்படும். கல்யாணம் செய்து கொள்ள இஷ்டப்பட்டவர்கள் வரலாம்.

என்று ஒருவன் சொல்லிப்பறையடித்துக் கொண்டு செல்லுகிறான்.

[காட்சி முடிகிறது]

# சுயமரியாதை இயக்கம் தோன்றியது எதற்கு?

[கைவல்யம்]

(சென்ற வாரத் தொடர்ச்சி)

எந்தச் சக்தியால், எப்பொருளால் எதன் எதுவால் இவ்வுலகம் தோன்றியதோ, அந்தச் சக்தி, அப்பொருள், அதன் எது இவைகளுக்குக் காரணமான ஜகத்பதியே எல்லாவற்றிற்கும் நாயகன் என்பதை ஆக்ஷேபிக்கச் சுயமரியாதைச் சங்கத்திற்கு எவ்வித அவசியமுமில்லை, ஆக்ஷேபிக்க வரவுமில்லை. ஆனால் அந்த ஜகத்பதி தன் முகத்திலிருந்து ஒரு கூட்டத்தாரை உண்டு பண்ணி வேதத்தைச் செய்து அவர்கள் கையில் கொடுத்து, காலிருந்து இன்னொரு கூட்டத்தாரை உண்டு பண்ணி, இவர்கள் அந்த வேதத்தைப் படித்தால் நாக்கையறுத்து, வாயில் காய்ச்சின இரும்பு சிலாக்கை உள்ளே செலுத்து என்றும், காதில் கேட்டால் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றென்றும் தான் செய்த வேதத்தில் சொல்லியிருப்பாரா? சொல்லியிருந்தால் அவரை எந்தக் கடவுளென்று சொல்லுவது? கடவுள் சொல்லவில்லையென்றால் அதுள்ள புத்தகத்தையும், அதை நம்புகின்றவர்களையும், அதை நம்பும்படியாக வெவ்வேறுவகையாகப் பல தந்திரத்தோடு கூடி எழுதப்பட்ட புராணங்களைப் படித்து அதைச் சனசமூகத்திற்குப் பிரசங்கம் செய்யும் பண்டிதர்களையும் என்னென்று சொல்வது? நீங்களே சொல்லுங்கள். கடவுளின் பாதத்திலிருந்துண்டானவன் அந்தக் கடவுளை நினைத்துத்தவசு செய்தால் முகத்திலிருந்து பிறந்தவனின் குழந்தை இறந்துவிடும். தவசு செய்த காலிலிருந்து வந்தவனின் தலையை வெட்டினால் முகத்திலிருந்து வந்தவனின் இறந்த குழந்தை பிழைத்துக் கொள்ளும். இந்த உண்மையையும் கடவுள் கட்டளையையும் உலகத்தாருக்கு நடத்திக் காட்ட வைகுண்டத்திலிருந்து வந்த கடவுள் நடத்திக் காட்டினாரென்று இதிகாசத்தில் சொல்லப்படுகிறது. அந்த இதிகாசமான இராமாயணம் சிருஷ்டிகர்த்தாவென்னும் பிரமாவால்முதல் முதல் சொல்லப்பட்டது.

விஷ்ணுவின் தொப்புளிலிருந்து பிரமா உண்டானார். அவரே சிவபெருமானைச்சிருஷ்டித்தார் என்று ஒரு கூட்டத்தாரும், சிவன் பிரமாவைச் சிருஷ்டித்து உலகத்தைச் சிருஷ்டிக்கச் சொன்னார் என்று ஒரு கூட்டத்தாரும் பிரமாவே எல்லாவற்றிற்கும் காரணமும் சிருஷ்டிகர்த்தாவும் என்று ஒரு கூட்டத்தாரும் பிரமாவின் உற்பவத்தைச்சொல்லுவார்கள். இதற்கெல்லாம் கடவுள் சொன்ன சாஸ்திரங்களே உண்டு. இந்தச் சாஸ்திரங்களை வியாக்கியானப் படுத்தி விரிவுரை நிகழ்த்தியவர்களெல்லாம் முக்காலமுணர்ந்த ஆச்சாரிகள். "எந்த சாஸ்திரம் எப்படிச் சொன்னாலும் எல்லாம் ஒன்றுதான். கடவுள் ஒன்றே. பெயர் மட்டும் வேறு. ஒரு ஊருக்குப் பலவழி. நதிகளெல்லாம் சமுத்திரத்திலே போய் விழுகின்றன. பருவத்திற்குத் தகுந்த ஆகாரம் வேண்டாமா? பருவம் வந்தால் எல்லாம் பக்குவப்பட்டுவிடும்" என்கிற வாதங்களினால் கடவுள் ஒன்றுதான் என்கிற நிச்சயம் செய்வதில் மேற்சொன்ன மூன்று கூட்டத்தார்களும் சமர்த்தர்கள்தான். ஆனால் அவர்கள் மனதில் மட்டும் நிச்சயம் வராது. வருவதும் அபூர்வம். ஏனெனில் தனித்தனிச் சங்கச்சாவடி ஏற்படுத்திக் கொண்டால் லாபமென்பது மட்டுமல்ல. அவர்களுடைய நடை, உடை, பாவனை, கல்வி, ஒழுக்கம், பாட்டு, ராகம், முன்கதைகள் தத்துவார்த்தம் முதலியவைகளெல்லாம் வித்தியாசப்பட்டுத் தங்கள் தங்கள் பழக்கங்களிலேயே முழுகடித்துவிட்டது. எந்தச் சாஸ்திரம் படித்தாலும், எந்த நாகரிகம் பழகினாலும், அவை போவதில்லை. உலகக்காரியார்த்தம் வரும்போது சிறிது விலகியிருந்தாலும் அந்தக் காரியம் தீர்ந்தவுடன் வந்து சேர்ந்து கொள்ளுகிறது. அவ்வேற்றுமை ஒழிந்து, ஒன்றே தெய்வம் ஒன்றே குறி என்கிற விஷயங்கள் வித்தியாசம் தீரவேண்டுமானால், சுயமரியாதை இயக்கம் சொல்லும் நெற்றியில் குறி அவசியமில்லை என்று சொல்லுவதை ஒப்புக்கொள்ள வேண்டும். மற்றபடி அது கடவுளில்லை என்று காட்டுவதற்கும், சமய உண்மைத் தத்துவங்கள் மறைந்துபோக வேண்டுமென்பதற்குமேயல்ல. எல்லாம் ஒரே குறியாகவுமில்லை. எல்லோரையும் ஒரே குறியாக்குவதும் கஷ்டம். எல்லாம் சிவன் எல்லாம் விஷ்ணு என்று பேசுகிற சைவவைணவர்களும், விபூதியைவிட்டு நாமமும், நாமத்தைவிட்டு விபூதியும் போட்டுக் கொள்ள மாட்டார்கள். ஆனதால் ஒன்றுமே வேண்டாமென்று சுயமரியாதைச் சங்கம் சொல்லிற்று. அதில் சிறிது அனுபோகம் கண்டிருக்கிறது. எப்படியென்றால் வெள்ளைக்கார அதிகாரிகளைப் பார்க்கையில் அவர்கள் அசிங்கப்படுவார்கள் என்று சிலர் நினைக்கிறார்கள். ஜனநாயகத்தத்துவத்திற்கு விரோதமென்றும் சிலர் கருதுகிறார்கள். தங்கள் தங்கள் குழந்தைகளுக்கு உடை உடுத்தித் தலைசீவி அழகு பார்க்கையில் கருப்புப் பொட்டை விரும்பினாலும் விபூதியையும் நாமத்தையும் விரும்புவதில்லை. இந்தக் காலத்தில் அநேகமாக ஆண்கள் தலைசீவிச் சிணுக்கெடுத்து அழகு பார்ப்பதே அமைந்துவிட்டது. நெற்றிக்குக் கீழே அரையங்குலம் மயிர் தள்ளிச் சீவ வேண்டியுமிருக்கிறது. அதற்குக் கீழே எண்ணையும் கசியும். எண்ணை கசிந்த நெற்றிக்கும் பூச்சுக்கும் பொருத்தமில்லை. அதுவுமல்லாமல் சீவின தலைக்கும் பட்டை நாமம்போட்ட நெற்றிக்கும் பொருத்தமில்லை என்கிற எண்ணமுமுண்டாயிருக்கிறது. கோவில் பிழைப்பு, உபகாரச் சம்பளம் பெற்று வைதீக வேஷம் போடும் பழய உத்தியோகஸ்தர்களும், ஜாதியையும், சமயத்தையும் வித்தியாசப்படுத்திக் கொண்டிருப்பார்களே யல்லாமல் மற்றவர்களெல்லாம் இலக்ஷன் என்னும் இங்கிலீஸ் நாகரீகத்தில் இன்னும் சிறிது காலத்தில் ஒரேகடவுள், எல்லாம் ஒரே சமயம் என்கிற நடையுடை பாவனை வந்துவிடுமென்பதில் சந்தேகமில்லை. அவைகள் எவ்வளவு வேகத்தில் வந்து விடுகிறதோ அவ்வளவும் இந்து சமயத்தவர்களுக்கு நன்மை என்றே சுயமரியாதை இயக்கம் சொல்லுகிறது.

"பழைய கொடுமைகள் சாஸ்திரங்களிலிருந்தாலும் அவைகளில் அநேகம் இப்பொழுது அனுபோகத்திலில்லையே. பலதள்ளப்பட்டு விட்டதே. அனுஷ்டானத்திலுமில்லையே. அப்படியிருக்க அதை ஏன் நீங்கள் மாற்றி மாற்றி எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்" என்கிற சங்கை உதிக்கலாம். அது சரியே. என்றாலும் அதன் கொடுமைகளின் அடிப்படைகள் இன்னும் போகவில்லை. அதன் முடிச்சை இன்னும் அறுக்கவில்லை. பட்டணவாசிகளில் பலருக்கு இன்னும் அதனுண்மை தெரியாது. இன்னும் சனசமூகங்களுக்கு அந்தவிஷயங்களும்அதைச்சம்பந்தித்த விஷயங்களும் பல சொல்ல வேண்டும். எல்லாரும் அதன் உண்மைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும். நியாயத்தை யெல்லாரும் தெரிந்து அதில் எண்ணமும் உதிக்க வேண்டும். பண்டிதர்களும் சாஸ்திரிகளுமே உண்மைக்குப் பரிந்து பேசவேண்டும் என்பதே என் எண்ணம். எனது எண்ணமும் கைகூடும் என வர வர எனக்கு நம்பிக்கை வலுவடைந்து வருகிறது. அதிலிருந்து எந்தப் பண்டிதர்களும் தப்பமுடியாது என்பது உறுதி.

# இளமைப் பயிற்சிக்கு ஈடு வேறில்லை.

ஒருவர் இன்னொருவருடன் பேசிக்கொண்டிருக்கும் பொழுது நாம் போகக் கூடாது என்பதை அறிகிறோம். ஆனால் போகாமலிருப்பதில்லை.

ஒரு காரியமாக ஒருவரைச் சந்திக்கப் போவோம்; சந்திப்போம். ஆனால் நீண்டநேரம் எதையெதையோ பேசிக் கொண்டிருப்போமே தவிர எதற்காகப் போகிறோமோ அந்த விஷயத்தைப் பற்றி லேசில் பேச்வதே கிடையாது.

சைக்கிளில் ஒருவருக்கு மேல் போக்கூடாது என்று நமக்குத் தெரியாமல் இல்லை. ஆனாலும் நாம் இன்னொருவரை ஏற்றிக் கொண்டு போவதைத் தவறாக நினைப்பதில்லை.

டிக்கட் வாங்கும் இடத்தில் க்யூ முறையில் நின்று டிக்கட் வாங்க வேண்டியதுதான் ஒழுங்கு என்பதை நாம் நன்கு அறிவோம். ஆனாலும் நாம் மட்டும் குறுக்கேத்தமாக எதிர்ப்பக்கம் சென்று டிக்கட் வாங்கப் போகாமலிருப்பதில்லை.

ரயில்வே பிளாட்பாரத்திற்குச் செல்லவேண்டுமானால் 1 அணா கொடுத்து பிளாட்பாரம் டிக்கட் வாங்கிக் கொண்டுதான் போக வேண்டும் என்பது நமக்கு நன்கு தெரியும். வழியில் நிற்கும் டிக்கட் பரிசோதகரும் டிக்கட் வாங்கும்படி சில சமயத்தில் சொல்லுவார் ஆனாலும் நாம் டிக்கட் இல்லாமல் செல்வதற்குத்தான் விரும்புகிறோம். அத்துடன் டிக்கட் வாங்கச் சொல்லுகிறவரைப் பார்த்துக் கோபம்கூடக் கொள்ளுகிறோம்.

ரயிலில் நாம் ஏறி உட்கார்க்கூட நமக்கு இடமில்லாதபோது படுத்திருக்கிறவர்களைப் பார்த்துக் கோபம் கொள்ளுகிறோம். ஆனால் நாம் படுத்திருக்கிற சமயம் உட்கார இடம்கேட்பவர்களிடம் நாம் சீறி விழுகிறோம்.

நம் வீட்டிற்கு விருந்தினர் அகாலத்தில் வந்து தொந்திரவு கொடுப்பதைப் பற்றி குறைகூறுகிறோம். ஆனால் நாம் அகாலத்தில் மற்றவர்கள் வீட்டிற்குப்போய் நமக்காக சமையல் செய்யச்சொல்லித் தொல்லை கொடுப்பதில் பின்வாங்குவதில்லை.

இம்மாதிரியே அனேக விஷயங்களைத் தவறு என்று உணர்கிறோம்; பிறர் செய்யும்போது குற்றமும் கூறுகிறோம். ஆனால் நாம் அதே காரியத்தைச் செய்யும்போது அதை நாம் தவறாக நினைப்பதே கிடையாது. இம்மாதிரியே பழக்கப் பட்டுப்போய் விட்டோம்என்பதைத் தவிர வேறுஒரு சமாதானமும் சொல்வதற்கில்லை.

இது ஒருபுறம் இப்படியிருக்க கல்யாணம் ஆகி ஒரு வருஷம் முடிந்தும் முடியாததற்கு முன்பே குழந்தை பிறந்துவிடவேண்டும் என்பதில் நம் நாட்டினரைப்போல் வேறு யாருமே கவலை கொள்வ




தில்லை. ஒரு வருஷம் என்பது 2, 3 வருஷங்களாகி ஒன்றும் இல்லாமலிருப்பார்களானால் உடனே மாமன், மாமி வகையராக்களின் வசை மாரியும்., கோவில், குளச் சுற்றுப்பிரயாண ஏற்பாடும், இளையதாரப்பேச்சும் ஆகியவைகள் தடபுடலாக நடப்பதையும் காண்கிறோம்.

குழந்தை பெற வேண்டும் என்பதில் இவ்வளவு ஆர்வம் செலுத்தி வரும் நம்நாட்டில்தான் பொது ரஸ்தாக்களில் குழந்தைகள் ஆபத்துக்குள்ளாகி உயிரிழப்பது அதிகம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. குழந்தை பெறுவதில்தான் அக்கரையே தவிர, எப்படி வளர்க்கப்படவேண்டும்? எம்மாதிரி பழக்கத்தைப் பயிற்றுவிக்கவேண்டும்? என்பன போன்ற விஷயங்களில் நாம் சிறிதும் அக்கரை யெடுத்துக் கொள்வதில்லை.. சற்றும் வயிறு குறையாமல்" தீனி—உணவு கொடுக்கிறதோடு திருப்தியடைந்து விடுகிறார்கள் பெற்றோர்கள். ஏதோ இரண்டு எழுதப்படிக்கக் கற்றுக் கொடுப்பதோடு தன் கடமை தீர்ந்து விட்டதாகக் கருதி விடுகிறார்கள் ஆரம்ப ஆசிரியர்கள். பள்ளிக்கூடத்தில் கால அட்டவணைப்படி பாடம் நடைபெறுகிறதா? அட்டென்டன்ஸ் ரிஜிஸ்டர் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கிறதா? என்பன போன்ற காரியங்களைச் சரி பார்ப்பதோடு தங்கள் வேலை பூர்த்தியாகி விட்டதாக நிம்மதியடைந்து விடுகிறார்கள் சர்க்காரார்!

ஆனால் லண்டனில் எந்தக் காரியத்தையும் குழந்தைப் பருவத்திலேயே சரியான முறையில் பயிற்றுவிக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். உதாரணத்துக்காக, ரஸ்தா விபத்துக்களிலிருந்து தப்ப குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்க செய்யப்பட்டிருக்கும் ஏற்பாட்டை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

போக்குவரத்து மிகுந்த பாதைகளில் நடந்து செல்லும்போதோ, அல்லது வாகனாதிகளை ஓட்டிச் செல்லும் போதோ, யாவரும் கைக்கொள்ள வேண்டிய விதிகளைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பதற்காக, லண்டனுக்கு வடபுறமுள்ள டாடன்ஹாம்என்ற இடத்தில் ஒரு 'மாடல் டிராபிக்' ஸ்தலம் திறக்கப்பட்டுள்ளது.

சுமார் 4½ ஏகரா பரப்புள்ளதும், மரம் செடி கொடிகள் உள்ளதுமான இந்த இடத்தில் குறுக்கு நெடுக்காகச் செல்லும் பாதைகளும், ஆபத்தான வளைசல்களுடன் கூடிய முடக்குகளும் அமைந்துள்ளன. இரு பாதைகள் சேரும் ஒவ்வொரு சந்திப்பிலும், போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகத் தானாக இயங்கும் சிகப்பு, மஞ்சள், பச்சை நிறச்சமிக்ஞை விளக்குகளும் உள்ளன. இதைத் தவிர நகரங்களில் அமைக்கப்பட்டுள்ளதைப் போலவே, இங்கும் நடந்து செல்லுபவர்களுக்கென ஒரு தனி மேடையும், நடந்து செல்லுவோர் எங்கெங்கு பாதையைக் குறுக்கே கடக்கலாமென்பதைக் காட்டும் சின்னங்களும் உள்ளன.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

# செய்தியும்-சிந்தனையும்.

[பொறுக்கி]

● ஜாதித்துவேஷத்தைக் கண்டிக்க ஐக்கிய தேச சபை மறுப்பது அதன் எதிர்காலத்திற்கான ஒரு கெட்ட அறிகுறியே யாகும்.

"விஜயலட்சுமி பண்டிதர்"

ஜாதித் துவேஷத்திற்குத் தாயகமாயிருக்கும் ஆரிய ராமராஜ்ஜியத்தின் அயல் நாட்டுப் பிரதிநிதியிலிருந்தா இந்த வாசகம்?

* *

● மகாத்மாவின் கொள்கைகளைப் பாராட்டி வாய் மொழியாகக் கூறுவதைக் காட்டிலும், செயலளவில் அக்கொள்கைகள் நிறைவேற்றப்படவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

"கவர்னர் ஷை"

சபாஷ்! அப்படி நிறைவேற்றப்பட்டால் தானே ஆங்கிலேயரும் அமெரிக்கரும் இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு, இந்த நாட்டை எல்லா வகையிலும் சுரண்ட முடியும்.

* *

● மேற்கு வங்க சர்க்கார் காரியாலயம்முன் நேற்று மாலை ஒரு நாட்டு வெடி குண்டு வெடித்தது.

"செய்தி"

"வடநாடுகளில் உத்தியோகப் பொறுப்பை யேற்றாலும் என் மனம் சென்னையிலேயே இருக்கும்" என்று சமீபத்தில் சென்னை வந்த போது ராஜாஜி போட்ட [illegible] என்பது இப்போது புரிகிறதா?

* *

● பர்மாவில் அஹிம்சாபூர்வ ஒத்துழைப்பு இல்லாமலிருந்தும் அது, இந்தியாவைவிட எவ்வளவோ முன்னால் பூரண சுதந்தரம் அடைந்து விட்டதற்காக அந்நாட்டைப் பாராட்டுகிறேன்.

"டாக்டர் காரே"

வலுவில் கிடைத்த டொமினியன் அந்தஸ்தை, எங்கள் அஹிம்சைப் போராட்டத்தால் பெற்ற விடுதலை என்று பித்தலாட்டம் பேசி, விழாக் கொண்டாடிய காங்கரசார் முகத்தில் இப்படிக் கரியைப் பூசினால், ஜவஹர்லால் முகம் எப்படிப் போகும் என்பதை காரே ஏனோ கருதவில்லை.

* *

● யு. எஸ்ஸுடன் ஒத்துழைப்பதே நம் உத்தேசம். அது போன்றே சோவியத் யூனியனுடன் பூரணமாக ஒத்துழைப்போம்.

"வெளிநாட்டு மந்திரி ஜவஹர்"

முதலாளிகளுடன் ஒத்துழைப்பதே நம் உத்தேசம். அது போலவே தொழிலாளிகளுடன் பூரணமாக ஒத்துழைப்போம் என்பதுதான், காங்கரசின் உள்நாட்டுக் கொள்கையும் என்பதை நீங்கள் நினைப்பூட்டிக்கொள்ளலாம்.

* *

● பொதுவாக ஆஸ்தானக் கவிகள் தேசீயக் கொண்டாட்டங்கள் பற்றிக் கவிகள் இயற்றுவார்கள். அவர்கள் இன்ன வேலையைச் செய்யவேண்டுமென்று சர்க்கார் ஒன்றையும் நிர்ணயம் செய்யவில்லை.

"கல்வி மந்திரி அவினாசியார்"

இந்த ஏற்பாடு சர்க்காரை விளம்பரப் படுத்துவதா? மொழியை வளர்ப்பதா? என் வேலையில் கல்வி மந்திரி என் தலையிடுகிறார் என்று விளம்பர மந்திரி பக்தவத்ஸலம் முணு முணுக்கலாமல்லவா?

* *

● ஹைதராபாத்துக்குச் சப்ளை செய்யப்படும் ஒவ்வொரு குண்டும், மக்களையும் ஜனநாயகப் போராட்டத்தையும், நசுக்குவதற்காகவே பயன்படுத்தப்படும்.

"சுவாமி ராமானந்த தீர்த்தர்"

இந்திய யூனியன் வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளும் குண்டு சப்ளை மட்டும் வேறு எதற்குப் பயன்படப்போகிறது? சுவாமிஜீ!

* *

● எம். எல். ஏ. திருடனைப் பிடித்தார்.

"ஒரு செய்தித் தலைப்பு"

இது [illegible] திறமையின்மையைக் காட்டுகிறதா? எம். எல். ஏ. போலீஸ் வேலைக்குத் தகுதியானவர் என்பதைக் காட்டுகிறா?

* *

● ராஜாஜீ தமிழ் நாட்டை விட்டு வடநாட்டிற்குப் போய் விட்டாரேயென்று ஒருவரும் வருத்தப்பட வேண்டியதில்லை.

"டாக்டர் சுப்பராயன்"

அவர் போனாலென்ன? அவரிருந்தால் என்ன செய்வாரோ அதைத்தான் அவர் ஆலோசனையின்மீது நான் செய்து கொண்டிருக்கிறேன் என்று கூறி, ராஜாஜீ கோஷ்டியின் கண்ணீரைத் துடைக்கின்றார் எனக் காமராஜ் கோஷ்டியினர் (காமராஜ் அல்ல) நினைக்கலாமல்லவா?

* *

● தென்னாட்டில் காந்தீயத்தையும் கதரையும் வளர்த்த பெரியார் ராஜாஜீ.

"சுப்பராயன் புகழ் மாலை"

காந்தீயத்தின் பேரால் பார்ப்பனீயத்தையும், கதரின் பேரால் பார்ப்பனர்களின் வயிற்றுப் பிழைப்பையும் வளர்த்த பெரியார் என்று இருந்தால் புகழ் மாலை சிறிது நீண்டிருக்கலாம். நீண்டாலும், அது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை ஓய்வேயில்லாத ஓமாந்தூரார் ஒவ்வொரு நேரத்திலாவது எண்ணலாம் அல்லவா?

* *

● சிறிய தென்னையையும் பனை மரங்களையும் விட்டு விட்டுப் பாக்கி மரங்களை யெல்லாம் வெட்டி விட்டால் கள் இல்லாமலே போய் விடும். 2 வருடம் இம்மாதிரி செய்தால் ஜனங்களின் குடிப்பழக்கம் ஒழிந்து விடும்.

"டாக்டர் வி கே ஜான்"

காங்கரஸ் சர்க்காரின் உண்மை நடவடிக்கை, மற்றக் காரியங்களில் இப்படித்தானே இருக்கிறது என்ற உறுதியினாலேயே, இந்த அபூர்வமான யோசனை வழங்கப்பட்டிருக்கவேண்டும் என்றே நம்புகின்றோம்.

* *

● விசேஷப் போலீஸ் படையில் ஆகஸ்ட்டு தியாகிகளுக்கும் வேலை கொடுக்கவேண்டும்.

"எஸ். பி. ஆதித்தன்"

இவ்வாறு அவர்களின் வயிற்றுப் பாட்டைக் கவனியாது போனால், மந்திரிகளின் வயிற்றுப் பாட்டிலும் நெருப்பு வைத்து விடுவார்கள் என்ற வதந்தியை இது நிச்சயப்படுத்துவதாகுமா?

* *

● நகரில் காப்பிப்பொடி, காப்பிக் கொட்டை கிடைக்காமல் பொதுமக்கள் இன்னும் திண்டாடுகிறார்கள். ஹோட்டல்களுக்கு மாத்திரம் எப்படியோ சப்ளை கிடைத்து விடுகிறது. இதனால் முக்கால் கப் காபி 2 அணாவாக விலை யுயர்த்தி உள்ளார்கள்.

"காரைக்குடிச் செய்தி"

எப்படியோ சப்ளை கிடைக்கிறது என்பது சரியில்லை. பார்ப்பனீய ராஜ்யத்தில் பார்ப்பனர் ஹோட்டல்களுக்குச் சப்ளை கிடைக்கிறது. இதிலென்ன ஆச்சரியம்?

---

## திருடருக்கழகு திருநீறடித்தல்.

---

# ஜனநாயக உருவான ஜவஹர்?

“அவர் வியவஸ்தையின்றியும் அறிவோ அர்த்தமோ இன்றியும் பேசியதாக நான் நினைப்பதால் அதற்கு நான் பதில் கூறப் போவதில்லை.”

இது மத்தியச் சட்டசபையில், காங்கரஸ்காரர்களின் ஆசைப்படி இந்தியப் பாராளுமன்றத்தில், பிரதம மந்திரி நெஹ்ருப் பிரபு அவர்கள், ஒரு நாள்விவாதத்தின்போது கூறிய பதிலாகும் என்று சொல்லப்படுகிறது.

ஜன நாயகத்தின் பாதுகாவலர் என்று பாராட்டப்படும் ஜவஹர்லால், ஆசிய ஜோதி என்று அலங்காரமாகப் பேசப்படும் தலைமை அமைச்சர், ஒப்புவமையில்லாத மாணிக்கம் என்று உலகத்தாருக்கு விளம்பரப்படுத்தப்படும் உத்தமர், தனிப்பட்ட வாழ்க்கையில், தனிப்பட்ட மனிதருக்கு இத்தகைய பதிலைக் கூறியிருப்பின், அதுவும் உண்மையில் அந்த மாதிரி அர்த்தமோ வியவஸ்தையோ இல்லாமல் பேசும் போது கூறியிருப்பின், வரவேற்கக் கூடியதேயாகும். ஆனால் பல ஆயிரம் மக்களின் பிரதிநிதியாகச் சட்ட சபையில் இருக்கும் ஒரு அங்கத்தினர், சரியான காரணங்களைக் காட்டிப் பேசிய நேரத்தில், இந்த மாதிரி பதில் கூறப்பட்டால் இதில் ஏதாவது யோக்கியமோ நாணயமோ காணப்படுகிறதா? என்பதைக் காங்கரஸ் தோழர்களே தயவு செய்து சிந்தியுங்கள்.

(1) இந்தியா தன் பிரிவினையை மட்டும் ஒப்புக்கொண்டு பாலஸ்தீனப் பிரிவினையை எதிர்த்தது ஏன்?

(2) தெ. ஆ. இந்தியர் விஷயத்தில் நான் இந்த இலாகாவை வகித்து வந்த போது சாதித்ததை விட இந்தச் சர்க்கார் ஏதும் செய்துவிடவில்லை.

(3) இலங்கையைப்பற்றிச் சொல்லாமலிருப்பதே நல்லது.

(4) பர்மாவில் அகிம்சாபூர்வ ஒத்துழைப்பு இல்லாமலிருந்தும் அது, இந்தியாவைவிட எவ்வளவோ முன்னால் பூரண சுதந்தரமடைந்து விட்டதற்காக அந்நாட்டைப் பாராட்டுகிறேன்.

பர்மா, இந்திய நலன்களில் தலையிடுவதானால் ரொக்கமாக நஷ்ட ஈடு கோரப்படவேண்டும்.

இந்தியாவின் அபிப்பிராயத்தைக் கேட்காமல் ஒரு முடிவுக்கு வருவதில்லை என உறுதி வாங்க வேண்டும்.

(5) வெளிநாட்டுக் கொள்கைகளால் ஏற்பட்ட பலனைப்பற்றி இவ்வளவு சீக்கிரத்தில் தீர்ப்புக் கூற முடியாது. நான் அறிந்த வரையில் ஒரு விஷயத்தில் பலன் பெற்றிருக்கின்றோம்.

நம் நண்பர்களில் பலரை வெளி நாடுகளுக்கு ஸ்தானிகர்களாகவும் தூதர்களாகவும் அனுப்பியிருக்கின்

**சாட்டை**

றோம் இதற்காகச் சர்க்காரைப் பாராட்டுகின்றேன்.

இந்த ஐந்து கருத்துக்களைத்தான் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய விவாத நேரத்தில் ஒரு மெம்பர் குறிப்பிட்டார். குறிப்பிட்டவர் இந்த வெளிநாட்டுத் துறையில் நிறைந்த அனுபவமுடையவர். இதற்கு முன்பு சாம்ராஜ்ஜிய உறவு மந்திரியாக இருந்தவர். அவர்தான் தோழர் காரே அவர்கள்.

இந்தக் கருத்துக்களுக்குப்பதில் கூறக் கடமைப்பட்ட நெஹ்ருதான் வியவஸ்தை, அறிவு, அர்த்தம், இல்லாத கருத்து எனக் கூறிப், பதில் கூறப் போவதில்லை எனக் கூறுகின்றார். இவர் ஜனநாயகத்தின் மறு பதிப்பு என்று நம் தேசியத்தாள்கள் வருணிக்கின்றன. காரே கூறியதை நமக்கு அறிவிப்பதற்கு முன்னால் “காரே சீறுகிறார்” எனத் தலைப்புத் தருகின்றன. இங்கு சீறுவது யார்? என்று தேசியத் தோழர்கள் சிந்திப்பார்களாக.

எந்தமாதிரியான வேளையில் தோழர் ஜவஹர்லால் அவர்கள் இந்தப் பதிலைக் கூறினார் என்பதை, அடுத்தபடியாக எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

தோழர் காரே அவர்கள் குறிப்பிட்ட ஐந்து கருத்துகளுள் சிலவற்றிற்கு, (வேறு அங்கத்தினர்கள் குறிப்பிடாத சிலவற்றிற்கு) நெஹ்ரு பதில் கூறுகின்றார். பதில் கூற முடியாத கட்டத்தில்தான் இந்த “ரிக்ஷாகாரன் பாணியில்” இறங்குகின்றார்.

“பாலஸ்தீனப் பிரிவினையை இந்தியா ஏன் எதிர்த்தது” என்ற கேள்வியைக் காரேயைத் தவிர வேறு யாரும் அங்கு குறிப்பிடவில்லை. அதற்கு நீண்டநேரம் செலவுசெய்து, பாலஸ்தீனப் பிரிவினையில் இந்தியா நடந்து கொண்டது எத்தகைய தீர்க்க தரிசனம் என்று சித்திரித்துப் பதில் கூறுகிறார். ஆனால் அவரின் மற்றையக் கருத்துகள் வியவஸ்தை அறிவு அர்த்தமில்லாதன என்று சீறுகின்றார்.

தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்தியர்கள் விஷயத்தில், நெஹ்ரு சர்க்கார் எந்த அளவு காரியம் சாதித்திருக்கின்றனர்? முன்பு இருந்த நிலையிலிருந்து இப்போது எந்த அளவு மாற்றமடைந்திருக்கிறது? அன்றாடம் வருகின்ற செய்திகள் “ஸ்மட்ஸின் நிற வெறி” இன்னும் அப்படியேதான் இருக்கின்றது என்றுதானே கூறுகின்றன. விஜயலட்சுமியார் பேசிப் பேசிப் பார்க்கின்றார்; அவர் பேசும்போது மற்றவர்கள் எல்லாம் வாயை அண்ணாந்து கொண்டு பார்க்கின்றார்கள்; ஆனால் விஜயத்தை (வெற்றியை) காணமுடியவில்லை என்றுதானே தேசியத் தாள்களும் கூறுகின்றன. இதைக் காரே குறிப்பிடும்போது மட்டும், ஏன் கருத்துச் சிதறவேண்டும்?

“இலங்கையைப்பற்றிச் சொல்லாமலிருப்பதே நல்லது” என்கின்றார் காரே. சொல்வதாயிருந்தால், இதுவும் தென்னாப்பிரிக்காவைப்போல முன்பு இருந்த

[தொடர்ச்சி 11ம் பக்கம்]

குடி அரசு

13—12—47 சனிக்கிழமை.

# சம்மத வயதா? ஜாதீய வேலியா?

இந்திய மத்தியச்சட்டசபையில் உத்தியோகத் தொடர்பற்ற மசோதாக்கள், இந்தமாதம் மூன்றாந் தேதி எடுத்துக்கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் தோழர் பண்டிட் தாகூர் தாஸ் பார்கவா என்பவர் கொண்டுவந்த ஒரு திருத்த மசோதா, விவாதத்திற்குப் பிறகு பொதுமக்கள் அபிப்பிராயம் அறிவதற்காக என்று திருத்தம்பெற்று நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

தோழர் பார்கவா அவர்களின் திருத்த மசோதாவின் நோக்கம் என்னவென்றால், 1928ம் ஆண்டில் சர்க்காரால் நியமிக்கப்பட்ட கமிட்டி, பெண்களின் சம்மத வயது சம்பந்தமாகச் செய்த சிபார்சுகளை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதாகும்.

கமிட்டி செய்த சிபார்சுகளுக்குள் முக்கியமாய்க் குறிப்பிடத்தக்கது என்ன? என்றால், விவாகத்திற்குப் புறம்பான பெண்களின் விஷயத்தில் சம்மத வயது 18ஆகவும் விவாகமான பெண்கள் விஷயத்தில் 15 ஆகவும் உயர்த்தப்படவேண்டும் என்பதேயாகும்.

விவாகத்திற்குப் புறம்பான பெண்கள், விவாகமான பெண்கள் என்ற இருவகைப் பெண்களையும் பற்றி இங்கு சிறிது விளங்கிக் கொள்ளவேண்டும். பெற்றோர்கள் மனம் ஒப்பி, அவரவர்கள் சாதிக்குள்ளேயே அவரவர்களின் சம்பிரதாயப்படி அல்லது அப்பெற்றோர்களின் மன விருப்பப்படி கலியாணம் செய்து வைக்கப்பட்ட பெண்கள் விவாகமான பெண்கள் என்று குறிப்பிடப்படுகின்றனர். இந்த முறையில் கலியாணம் செய்யப்படாத பெண்கள் அதாவது சாதி விட்டுச் சாதியில் (கலப்பு மணம்) கலியாணம் செய்துகொள்ள விரும்புகிறவர்களும் விதவையாகி மறுமணம் செய்துகொள்ள விரும்புகிறவர்களும் கலியாணமே செய்துகொள்ளாமல், தேவைப்பட்ட ஆடவர்களைக் கூடிவிட்டுத் தனிவாழ்க்கை வாழ வேண்டுமென்று விரும்புகின்ற பெண்களும், விவாகத்திற்குப் புறம்பான பெண்கள் ஆவார்கள் என்று குறிப்பிடப்படுகின்றது என்று கூறலாம்.

இங்கு குறிப்பிட்ட விவாகமான பெண்கள், தங்களின் கணவன்மாரைக் கூடவேண்டுமானால் அப்போது அவர்களுக்கு 15 வயதாக ஆகவேண்டும் என்பதும் விவாகமாகாத பெண்கள், தம் மனத்திற்கு விரும்பிய கணவனையோ அல்லது ஆடவர்களையோ கூடவேண்டுமானால் அப்போது அவர்களுக்கு 18 வயதாக ஆகவேண்டும் என்பதும், அதாவது இப்போதிருக்கின்ற 14 வயது (விவாகமான பெண்ணின் சம்மத வயது) 16 வயது (விவாகத்திற்குப் புறப்பான பெண்களின் சம்மத வயது) என்ற சட்டங்களைத் திருத்தி 15 வயது 18 வயது என்பதாக உயர்த்தவேண்டும் என்பதுதான் இந்தத் திருத்த மசோதாவின் கருத்தாகும்.

சாரதாச் சட்டம் ஏற்பட்ட பிறகு இப்போதிருக்கிற விவாக முறைச் சட்டங்களை வகுத்துப் பார்ப்போமானால் மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

(1) சாதிக்குள்ளேயே சம்பிரதாய முறை கெடாமல் செய்துகொள்ளுகின்ற கலியாணம். இதற்குப் பெண்ணின் சம்மத வயது 14 ஆக இருக்க வேண்டும்.

(2) சாதிக்குள்ளேயோ அல்லது கலப்பு மணமாகவோ இரண்டு ஆண் பெண்கள் இஷ்டப்பட்டு வாழ்க்கை நடத்துவதற்கு முன் வந்து செய்து கொள்ளும் (ஸ்பெஷல் மேரியேஜ்) பதிவுத் திருமணம். இதற்குப் பெண்ணின் சுயேச்சையான சம்மத வயது 21 ஆக இருக்கவேண்டும்.

(3) இந்த இரண்டு வகையிலும் இல்லாமல் ஒரு ஆணும் பெண்ணும் கூடவேண்டுமானால் அப்போது பெண்ணிற்கு 16 வயது ஆக இருக்கவேண்டும். அதாவது இஷ்டப்பட்ட ஒரு ஆணை இஷ்டப்பட்ட ஒரு பெண் கூட்டிக் கொண்டு போவதாயிருந்தால், பெண்ணுக்கு வயது 16 ஆக இருக்க வேண்டும்.

இதுதான், இப்போதிருக்கின்ற கலியாண வர்ணாச்சிரம முறையாகும். இதைத் திருத்த வேண்டுமென்பதற்காகக் கொண்டுவந்திருக்கின்ற தோழர் பார்கவா அவர்களின் திருத்த மசோதா, வருணாச்சிரம முறையைப்பற்றி ஒன்றும் சொல்லாமல், அதாவது சட்டரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இந்த மூன்று வகையும் ஒழிக்கப்பட்டு எந்த வகையில் விவாகமானாலும், விவாகமாகாத போனாலும் பெண்களின் சம்மத வயது ஒரு வயதாகவே இருக்கவேண்டும் என்ற திருத்தமாக இல்லாமல், வருணாச்சிரம முறையைக் காப்பாற்றும் வகையில், கலப்பு மணத்திற்கு இடமில்லாத வகையில், பழைய கருப்பனே கருப்பனாக இருக்கின்றது என்பதைத் திராவிடர் உணரவேண்டும்.

பெற்றோர்கள் பார்த்துச் செய்து வைக்கின்ற, அதாவது சாதகப்பொருத்தம் பார்த்து ஐயர் கூறுகின்ற ஏற்பாட்டின்படி, பெற்றோர்கள் செய்து வைக்கின்ற கலியாணமே உயர்ந்த கலியாணம் என்று, ஏற்கனவே இருந்து வருகின்ற முறையைப் பாதுகாத்து, சம்மத வயது மட்டும் 14 ஆக இருப்பதை 15 ஆக உயர்த்த வேண்டுமாம்.

வாழப் போகின்ற இரண்டுபேர் இஷ்டப்பட்டுக்கலியாணம் செய்து கொள்ள வந்தால் அப்போது பெண்ணின் வயது 21 ஆக இருக்க வேண்டும் என்கிற பழைய சட்டத்தைப்பற்றிப் பேச்சேயில்லை. அப்படியானால் அதற்கு மட்டும், அதாவது ஒழுங்கான திருமண முறைக்கு மட்டும் பெண்ணின் சுயேச்சையான சம்மத வயது 21 ஆகவே இருக்க வேண்டுமாம்.

ஒரு பெண் தனக்கு விருப்ப

மான கணவனை அடையவேண்டும்; பாதுகாப்புக்குச் சட்டமும் துணை செய்யவேண்டும், என்றெண்ணினால் முடியாது. வேண்டுமானால் கலியாணமில்லாமல், வாழ்க்கைக்குப் பாதுகாப்பு இல்லாமல் இஷ்டப்பட்ட போக்கில் திரியலாம். அதற்கு அனுமதியுண்டு. ஆனால் அதற்கும் 16 வயது ஆக இருப்பதை 18 வயதாக உயர்த்தவேண்டுமாம். இது தான் திருத்த மசோதாவின் விளக்கமான கருத்து ஆகும்.

பெண்களின் சம்மத வயது, அதாவது ஒரு பெண் ஒரு ஆணைக்கூடுவதற்கேற்ற வயது 15 ஆக இருக்க வேண்டும்; 16 ஆக இருக்கவேண்டும்; 18 ஆக இருக்க வேண்டும்; அல்லது 21 ஆக இருக்கவேண்டுமென்று ஏதோ ஒரு பொருத்தமான வயதை நிர்ணயம் செய்வதில் நமக்கும் ஒன்றும் ஆட்சேபனையில்லை. ஆட்சேபனையில்லாததுமட்டுமல்ல அவசியம் தகுந்த வயதை நிர்ணயம் செய்யவேண்டியதுமாகும்.

சின்ன வயதிலேயே நாட்டின் வெப்பமிகுதியால், நம் நாட்டில் பெண்கள் பக்குவமடைந்து விடுகின்றார்கள். 8 வயது, 9 வயதுகளிலே கூடச் சில சிறுமிகள் பக்குவமடைவதைப் பார்த்து வருகின்றோம். பெரும்பாலும் 12வயதிற்குள்ளாகவே இந்த மாற்றம் நடந்துவருகிறதென்று சொல்லிவிடலாம். பருவமடைந்த உடனேயே விவாகஞ் செய்துகொள்வதற்கு, அதாவது ஒரு ஆடவனோடு கூடுவதற்கு அந்தச் சிறுமி தகுதியானவள் என்று எப்படிச் சொல்ல முடியும்? இருந்தாலும் தகுதியானவள் என்றே நம்பி [ஆரியர்கள் போக்கில்] அவர்களைப் பெரிய மனுஷி ஆகிவிட்டவர்கள் என்றே குறிப்பிட்டு, பருவமடைந்தவுடன் வீட்டிற்குள் அடைத்து, "ஒருவன் கையில் பிடித்து ஒப்புவித்துவிட வேண்டும்; இல்லாத வரையில் நிம்மதியில்லை", என்று சொல்லிக் கொண்டு பருவமடைந்த நாளிலிருந்தே மாப்பிள்ளைகளுக்கு, ஐயர் அமைக்கின்ற ஜாதகம் பொருத்தம் என்கின்ற துப்பாக்கியைக்கொண்டு வேட்டையாடி வருவதை நாம் பார்த்து வருகின்றோம். இவ்வாறு சிறுவயதில், அதாவது குடும்பவாழ்க்கைக்குக் கொஞ்சமும் தகுதியில்லாத நிலையில் கணவனைக்கூடி வாழ்வதினால், அவர்களுக்குண்டாகும் உடல்நலக் கேட்டையும், அவர்கள் கலியாணமான மறு வருடத்திலேயே கையில் குழந்தையுடன் காட்சியளிக்கின்ற புதுமையையும், அக்குழந்தைகள் எலிக் குஞ்சுகளைப்போல் நோஞ்சலாகப் பலவீனத்துடன் காணப்படும் கேட்டையும், இதனால் நாட்டுமக்களின் சராசரி வயதும் குறைந்து நாட்டுக்கு உழைப்புச் சக்தியும் ஒரு பக்கத்தில் குறைந்துவிடுகின்ற பெருங்கேட்டையும், மற்றொரு பக்கத்தில் இந்த மாதிரிப் பலவீனமான சந்ததிகளைப் பற்றிக்கொள்ளும் நோயைப் போக்குவதற்காக ஏற்பட்டுவரும் நாட்டின் பொருட்கேட்டையும், இதற்கு முன்பு பல வகையிலும் அவ்வப்போது எடுத்துச் சொல்லி, இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமென்று வற்புறுத்திவந்த நமக்கு, பெண்களின் சம்மத வயதை உயர்த்துவதிலே எப்படி ஆட்சேபனையிருக்கமுடியும்? அவசியம், போதிய வயதை நிர்ணயம் செய்ய வேண்டியதுதான் என்பதையும், அதுவும் 15 வயதாக இல்லாமல் 16 வயதாக நிர்ணயம் செய்ய வேண்டியதே நல்லது என்பதையும், 16 வயது ஆனாலுங்கூட அந்த வயதிற்குமேல் "டாக்டரின் சர்டிபிக்கேட்" பெற்று உடல் தகுதியைப் பரிசோதனை பார்த்துக்கொண்ட பிறகே மணம்செய்ய வேண்டும் என்பதையும், நாம் இங்கு வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகின்றோம்.

ஆனால் விவாகமுறையில் வர்ணாச்சிரமத்தை ஏன்புகுத்தவேண்டும்? புகுந்திருப்பதை ஏன் திருத்தக்கூடாது? திருத்துவதினால் உண்டாகப் போகும் நஷ்டம் என்ன? இந்தக் குறைகளுக்குப் பரிகாரமில்லையா? இவைகளைப் பற்றிய பேச்சே திருத்த மசோதாவில் இல்லை. இருந்திருந்தால் ஆச்சரியப்படலாமே தவிர, இல்லாதிருப்பதால் திராவிடர்கள் ஆச்சரியப்படவும் மாட்டார்கள். ஏன்? இப்பொழுது நடைபெறுவது பார்ப்பனீய இராமராஜ்ஜிய ஆட்சியே என்பதைத் திராவிடர்கள் நன்குணர்வார்கள். இந்த ஆட்சியில் திராவிடர்களின் நன்மைக்கான-திராவிட சமுதாயத்தின், வளப்பத்திற்கான திட்டங்களை நிறைவேற்ற முடியாது என்பதினாலேயே "திராவிடநாடு திராவிடருக்கே" என்ற முழக்கத்தை எழுப்பி, அதற்காகப் பாடுபட்டு வருகின்றவர்கள் எப்படி பார்ப்பனீய ஆட்சியில் நன்மை விளையும், நன்மையான திட்டங்கள் கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்க முடியும்?

பழைய வருணாச்சிரம முறை தவறாதிருக்க வேலி பலமாகப்போடப் படுகின்றது என்பது தான் இதிலிருந்து தெரிகிறதே தவிர, பாசிசப் பட்டேல் பிரபு சொல்லியிருப்பதைப் போல, இப்போதைய திருத்த மசோதா பாமரமக்களின் மத உணர்ச்சியைப் பாதிக்கக் கூடியது என்று நம்மால் நினைக்கவே முடியவில்லை. பாப்பனர்கள் இம்மசோதாவைக் குறித்து என்ன கருதுகிறார்கள்? பார்ப்பனீய நன்மைக்கு இம்மசோதா வேறு எவ்வாறு இருந்தால் நல்லது; என்பவைகளைப் பார்ப்பனர்கள் (ஏனென்றால் அவர்கள்தானே பொது ஜனம்) சிந்தித்து முடிவு கூற வேண்டும் என்பதற்காகவே, இந்தத் திருத்த மசோதா பொது ஜன அபிப்பிராயம் அறிய முடிவு கட்டப்பட்டிருக்கின்றது என நாம் உறுதியாய் நம்பலாம்.

திராவிடர்கள் குறிப்பாகக் காங்கரஸ் திராவிடர்கள் இதை எண்ணிப்பார்ப்பார்களாக. 16 வயது வந்த ஒருபெண், அல்லது 18 வயது வந்த ஒரு பெண் பதிவுத் திருமணம் செய்து கொண்டு ஒழுங்காக வாழுவதற்குச் சட்டம் இடங் கொடுக்கவில்லை. ஆனால் திருமணம் என்ற பெயரில்லாமல் கூட்டிக் கொண்டு ஓடுவது, தவறான முறையில் நடந்து கொள்ளுவது ஆகிய செயல்களுக்கு வேண்டுமானால் சட்டம் இடங் கொடுக்கிறது. சட்டத்தின் பெயரால்ஒழுங்கினத்தை, விபசாரத்தை வளர்க்க அனுமதிக்கப்படுகின்றது. காரணம்ஒழுக்கக்கேடு உண்டானாலும் உண்டாகட்டும், வருணாச்சிரமம் அழிந்து போய்விடக் கூடாது என்ற அச்சத்தைத் தவிர வேறு என்ன கூறமுடியும்?

**ஜாதீயம் ஒழிய வேண்டும் என்**

று, சொல்லியே தீரவேண்டிய சந்தர்ப்பங்களில் சொல்லி வரும் காங்கரஸ்காரர் அல்லாமல், உண்மையாகவே ஆசைப்படுகின்ற காங்க்ரஸ் திராவிடத்தோழர்களை இதுஜாதீயத்தை நிலை நிறுத்துவதா? அல்லது ஒழிக்க முயலுவதா? எனச் சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

★

## நமது ஆசிரியர்கள்.

நம் திராவிடஆசிரியர்கள்சென்ற வாரம் சென்னையில் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் தலைமையில் ஒரு மாநாட்டை நடத்தி, ஆங்கிலங்கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் சம்பளத்தைப் போலவே தங்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் எனவும், அவ்வாறு அளிக்கவில்லை என்றால் பொதுமக்கள் கிளர்ச்சியாக மாற்றிப் போராட்டத்தில் ஈடுபடுவோமெனவும், கனம் கல்வி மந்திரியாருக்கு அறிவித்திருக்கின்றார்கள்.

இந்த நமது ஆசிரியர்கள், திராவிட ஆசிரியர் மாநாடு என்று பெயர் குறிப்பிடாமல், தென்னிந்திய மொழி ஆசிரியர் மாநாடு என்று குறிப்பிட்டு, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழி ஆசிரியர்கள் மட்டுமே மாநாட்டில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்து, கோரிக்கையை வற்புறுத்தியிருப்பது, சரியான வழியைக் கடைப்பிடித்தும் சரியான பெயரைத் தருவதற்குச் சளைத்துவிட்டார்களே என்று ஒருபுறம் குறைகூறத்தக்கதாயிருந்தாலும், தென்னிந்திய மொழிகளுக்குச் சமஸ்தானக் கவி என்று சொல்லித் தென்னிந்திய மொழிகளோடு (திராவிட மொழிகளோடு) சமஸ்கிருதத்தையும் சேர்த்திருக்கும் சர்க்காரின் அக்கிரம ஆணவக் கண்மூடிப் போக்கிற்கு, இது சரியான சூடு ஆகும் என்றே நினைக்கிறோம்.

திராவிட ஆசிரியர்கள் இவ்வாறு ஒன்றுகூடிச் செய்யும் ஏற்பாட்டையும், அவர்கள் வற்புறுத்தியிருக்கும் கோரிக்கையையும் பாராட்டுகின்றோம். தென்னிந்திய மொழி ஆசிரியர்கள் என்று சமஸ்கிருத ஆசிரியர்களை விலக்கிக் கூடியிருப்பதானது, தென்னிந்திய மொழி ஆசிரியர்கள் என்ற போர்வையில் வயிறு வளர்த்துக் கொண்டு திராவிட மொழிகளின் தூய்மையைக் கெடுத்துவரும் பார்ப்பனத் திராவிட மொழி ஆசிரியர்களை இனிமேலாவது விலக்குவதற்கு நல்ல அறிகுறியாகும் என்று நினைப்பதினால் இவ்வேற்பாட்டைப் பாராட்டுகின்றோம். ஏனென்றால் தென்னிந்திய மொழி ஆசிரியர்கள் என்ற தொடரை முழுவதும் பரிசீலனை செய்யவில்லை எனவும், பரிசீலனை செய்திருப்பின், தென்னிந்திய மொழிகளின்பேரால்வாழ்வை நடத்தும் ஆசிரியர்கள் என்று மட்டும் அர்த்தம் செய்திருக்க முடியாதெனவும், தென்னிந்திய மொழிகளைப் பரப்பி, அவற்றின் தூய்மை கெடாமல் வளர்த்து, அவற்றின் நலத்திற்காகவே நம் வாழ்வு என்ற சீரிய அர்த்தம் செய்திருப்பின், பார்ப்பனத் திராவிடமொழி ஆசிரியர்களின் முகமூடி கிழித்தெறியப் பட்டிருக்குமெனவும், தென்னிந்திய மொழிகள் என்று குறிப்பிடாமல், திராவிடமொழி என்றே குறிப்பிட்டிருக்க வேண்டுமெனவும், காலஞ்செல்லச் செல்லக் கஷ்டத்தை உணர்ந்தாவது இந்த முடிவுகளுக்கே வரவேண்டும் எனவும் நம்புகின்றோம்.

திராவிடமொழி ஆசிரியர்கள் வற்புறுத்தியிருக்கும் கோரிக்கை என்ன? எங்களுக்குத் தந்துவரும் சம்பளம், எங்கள் வாழ்க்கைக்குப் போதவில்லை; இருப்பதா இறப்பதா என்ற நிலையிலேயே எங்களின் குடும்பங்கள் இருந்து வருகின்றன; இது சர்க்காருக்கும் நன்றாகத் தெரியும்; தொழிலாளர்களின் வாழ்க்கைப் புள்ளி விபரங்களை அறிந்து தான் அதற்கேற்ப அவர்களுக்கும் மற்றுஞ்சில துறைகளில் உள்ளவர்களுக்கும் சம்பளத்தைஉயர்த்தி விட்டு நீங்களும் உயர்த்திக் கொண்டிருக்கிறீர்கள்; ஆகவே எங்களுக்கு வாழ்க்கைக்கு போதுமான சம்பளம் கூடத் தர வேண்டுமென்பதில்லை; மற்ற ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு எந்த அளவு தருகிறீர்களோ, அந்த அளவாவது எங்களுக்குக் கொடுங்கள்; என்பதாகவும், நாங்கள் ஆங்கிலம் கற்றவர்களாக இருந்தாலும் கற்காதவர்களாக இருந்தாலும் செய்து வருகிற வேலை, அதனால் ஏற்படும் பலன் ஆகியவைகளில் எவ்வித வித்தியாயாசமுமில்லை யாதலால், எங்களுக்குள் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாளாதீர்கள் என்பதாகவும், ஆங்கிலம் கற்றுவந்த ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களால் நம் மாணவர்களுக்கு ஏற்படும் பிரயோஜனத்திற்கு, எங்களால் ஏற்படும் பிரயோஜனம் எந்த வகையிலும் குறைந்ததில்லை யாதலால் அவர்களைக் காட்டிலும் குறைவாக எங்களுக்குச் சம்பளத் திட்டம் அமைப்பது நியாயமில்லை என்பதாகவும், எங்களின் நியாயமான முயற்சி பலன் தராதுபோகுமானால், நாங்கள் பொதுமக்களைக் கொண்டே கிளர்ச்சி செய்து வெற்றி பெறுவோம்; அதாவது மற்ற துறைகளில் உள்ள தொழிலாளர்கள் அவர்களே சத்தியாக்கிரகம், மறியல், என்று செய்வது போல நாங்களே செய்ய மாட்டோம்; எங்கள் வாழ்வு என்பது பொதுமக்கள் வாழ்வு என்பதையுணர்த்திப், பொது மக்களைக் கொண்டே கிளர்ச்சி செய்து பொது மக்கள் வெற்றியாக ஆக்குவோம் என்பதாகவும், அதற்காக ஒரு கமிட்டியை நியமிக்கப் போகின்றோம் என்பதாகவும், தங்களின் கோரிக்கையை விளக்கிக் கூறியிருக்கின்றார்கள். இதனாலேயே, அதாவது பொதுமக்கள் கிளர்ச்சியாகச் செய்து போராடுவோம் என்று விளக்கியிருப்பதினாலேயே இக் கோரிக்கையைப் பாராட்டுகிறோம் என நாம் கூறியதாகும்.

ஏழ்மை நிறைந்த நம் நாட்டில் ஆசிரியர்களுக்கு, 100, 200, 500, 1000 என்று சம்பளம் கொடுப்பது நல்லதில்லை எனவும்; இம்மாதிரி செய்வது, படித்தவர்கள் என்றால் ஏதோ அவர்கள் ஒரு தனிப்பிறவி என்கிற தத்துவத்தைப் பரப்பி வந்திருக்கிறது எனவும்; நூற்றுக்குப் பத்துப்பேரே படித்திருக்கும் நம் நாட்டில் உயர்தரக் கல்விக்குச் செலவு செய்வதைச் சிறிதுகாலம் நிறுத்தி ஆரம்பக்கல்விக்கே செலவுசெய்து, அதுவும் 20, 30 ரூபாய்க்கு மேற்

படாமல் ஆசிரியர்களுக்குச் சம்பளங்கொடுத்து நாட்டு மக்கள் அனைவரையும் கட்டாயமாகப் படிக்கச்செய்ய வேண்டுமெனவும், அப்பொழுதுதான் மக்களாட்சி நடைபெறுகின்றது என அர்த்தமாகும் எனவும், இந்நாட்டின் எதிர்காலக் கல்வி முறையைக் குறித்து நாம் அடிக்கடிவற்புறுத்தி வந்திருக்கின்றோம்.

இவ்வாறு கொண்ட நம் கருத்துக்கு விரோதமாகத் திராவிட ஆசிரியர்களின் சம்பள உயர்வை, அதாவது 45ஆக இருப்பதை 60 அல்லது 80ஆக உயர்த்தவேண்டுமென்பதை—நாம் இப்போது நியாயமானது, அவசியம் செய்ய வேண்டியது என ஏன் வற்புறுத்துகின்றோமென்றால், இப்போதைய வாழ்க்கைச் செலவை மனதில் எண்ணியே யாகும். அதாவது போருக்கு முன்னால் இருந்த வாழ்க்கைத் தரத்தைக் காட்டிலும், இப்போது 3 மடங்கு அளவுக்காவது உயர்ந்திருக்கிறது என்பதைத் தெளிவாக அறிந்திருக்கின்றோம்.

மேலும் இந்த ஆசிரியர்களின் தகுதி, திறமை ஆகியவைகளுக்கு மிக மிகக் குறைந்த தகுதி திறமையுடையவர்கள் எல்லாம், வெவ்வேறு துறைகளில் அதிகச் சம்பளத்தை அடைந்து வருகின்றார்கள் என்பதினாலும், அதுபோலவே மற்ற ஒவ்வொரு துறையிலும் உள்ளவர்களின் வருமானம் உயர்த்தப்பட்டால் தான், பொதுவான சமூக வாழ்வு ஒழுங்காகுமெனவும்,உறுதியாய் நம்புவதினாலுமேயாகும்.

ஆகவே,திராவிட ஆசிரியர்களின் கிளர்ச்சி வெல்வதாகுக! என நாம் மனமார ஆசைப்படுகின்றோம். ஆசைப்படுவதோடன்றி அவர்களின் கிளர்ச்சி விரிவடைய வேண்டுமெனவும் இந்த நேரத்தில் சொல்லி வைக்கின்றோம்.

தன்னுடைய பெயருக்கு "ந" போட்டு எழுதுவதா? "ன" போட்டு எழுதுவதா என்பதைக் கூடத் தெரியாத பேர்வழிகள் எல்லாம்,மந்திரிகளாக—கல்வி மந்திரிகளாகக் கட்சி பலத்தால் வந்துவிடுகிற மோசமான முறையை மாற்றித், திராவிட மொழியாசிரியர்களிலேயே ஒருவர் கல்வி மந்திரியாக வர வேண்டும் என்பதாகக் கிளர்ச்சி விரிவடைய வேண்டும் என்பதே நாம் இங்கு குறிப்பிட்டதாகும் எனவும், அதைப் பற்றிய திட்டத்தையும் திராவிடமொழி ஆசிரியர்கள் கைக்கொள்ள வேண்டும் என்பதாகவும் கூறி இதை முடிக்கின்றோம்.

---

[7ம் பக்கத் தொடர்ச்சி]

நிலையில்தான் இப்போதும் இருந்து வருகிறதே தவிர, நெஹ்ரு சர்க்கார் ஏற்பட்ட பிறகு, மாறுதல் எதுவும் உண்டானதென்று குறிப்பிடமுடியாது என்பதினாலேயே "சொல்லாமலிருப்பதே நல்லது" என்கிறார். இலங்கையில் இந்தியர்களுக்கு இருந்துவரும் குறை, இப்போது தன் சர்க்கார் ஏற்பட்டபிறகு எந்த அளவு குறைந்திருக்கின்றது என்பதையல்லவா வெளிநாட்டிலாகா மந்திரி விளம்பி யிருக்கவேண்டும். விளக்கம் தராத போனாலும், குறையை எடுத்துக் காட்டியவரை விவஸ்தை இல்லாதவர் என்று குறிப்பிட்டால், நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? யாருக்கு விவஸ்தை இல்லை?

பர்மாவில், இந்தியாவில் இருப்பதுபோல ஒரு மகாத்மா இல்லை; அங்கு சத்தியாக்கிரகம், வெளிநாட்டுத்துணி பகிஷ்காரம் போன்ற ஏமாற்று நாடகங்கள் நடைபெறவில்லை; கத்தியின்றி ரத்தமின்றி நடத்தவல்ல அகிம்சாப் போர் அங்கு கிடையாது; அப்படியெல்லாமிருந்தும் அவர்கள் சுயராஜ்ஜியம் பெற்றார்கள்; சுயாராஜ்ஜியம் உண்மையாகவே சுதந்தரமான சுயராஜ்ஜியம்;இந்தியாவைப்போல டொமினியன் அந்தஸ்து அல்ல; ஆதலால் அகிம்சை என்ற பித்தலாட்டமான வார்த்தையே யில்லாமல், இந்தியாவைவிட எவ்வளவோ முன்னால், பூரண சுதந்தரம் அடைந்து விட்டதற்காக நான் அந்த நாட்டைப் பாராட்டுகின்றேன் என்று தோழர் காரே கூறுகின்றார். இது அர்த்தமில்லாததா? அறிவு இல்லாத வாசகங்களா? இந்தியா அடைந்திருக்கும் டொமினியன் அந்தஸ்த்தையும் பர்மா பெறப்போகும் சுதந்தரத்தையும், டொமினியன் அந்தஸ்தைப் பெறுவதற்கு இந்தியா அடைந்து வந்திருக்கும் ஏராளமான நஷ்டங்களையும், பூரண சுதந்தரம் பெறுவதற்கு பர்மா அடைந்திருக்கும் சிறு நஷ்டங்களையும், எண்ணிப் பார்க்கும் எவரும் பர்மாவைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அவ்வாறிருக்க ஜவஹர்லால் ஏன் காரேயைக் காய வேண்டும்? டொமினியன் அந்தஸ்தைப் பூரண சுதந்தரம் என்றுபாமரமக்களை நம்பச் செய்து, ஆகஸ்ட்டுப் பதினைந்தை ஆடம்பரமாகக் கொண்டாடச் செய்தோமே, எவ்வளவு விவஸ்தையில்லாத, அறிவும் அர்த்தமுமில்லாத காரியம் என்ற எண்ணத்தைக் காரேயின் கருத்து உண்டாக்கியதினாலேயே, குட்டு உடைபட்ட குடும்ப விபசாரியின் பாணிக்கு வந்திருக்க வேண்டுமல்லவா?

இதுவரைக்கும் வெளிநாட்டுக் கொள்கைகளில் இன்னபலன் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது; காலமும் அதிகமாகவில்லை; ஆனால் ஒரு பலன் ஏற்பட்டிருக்கிறது; வெளிநாடுகளுக்கு ஸ்தானிகர்களாகவும் தூதர்களாகவும் நம் நண்பர்களில் பலரை அனுப்பியிருக்கின்றோம், என்று கடைசியாகக் காரே கூறுகின்றார்.

வெளிநாடுகளுக்கு ஸ்தானிகர்களையும், தூதர்களையும் காங்கரஸ் பிரசாரகர்களாகத் தேர்ந்தெடுத்துச் சர்க்கார் பணத்தை (பொதுமக்கள் பணத்தை) அள்ளிக் கொடுத்து அனுப்பி வைத்திருக்கின்ற ஒன்றுதான், இப்பொழுது நாம் கண் கண்ட பலனாக இருக்கிறதே தவிர, அதாவது "எங்கள் வீட்டுக்காரரும் கச்சேரிக்குப் போயிட்டு வருகிறார்" என்றுபெருமையாகச்சொல்லிக் கொள்ளத்தகுந்த அளவுக்கும், "பிள்ளை பிழைத்த பாடில்லை, இருந்த விளக்கெண்ணைக்குத்தான் கேடாக முடிந்தது" என்று சொல்ல வேண்டிய அளவுக்குமாக இருக்கிறதே தவிர வேறு பலன் ஒன்றும் இல்லை என்று குறிப்பிடுகின்றார் காரே.

விவாதத்திற்குப் பதில் கூற முடியாத விவேகமற்றவர்கள்,உண்மையை ஒப்புக்கொள்ள மறுக்கின்ற உலுத்தர்கள், ஆணவப் பெருக்கால் அறிவைப் பறி கொடுத்த அகங்காரிகள், எதேச்சாதிகாரப் போக்கால் இன்

னதுதான் பேசுகின்றோம் என்ற அர்த்தம் புரியாமலே பேசுகின்ற எத்தர்கள், எவ்வாறு வேண்டுமானாலும் பதிலளிக்கலாம். ஆனால் ஜனநாயகத்தின் பேரால் ஆட்சி புரிகின்றேன் என்னும் ஜவஹர் இவ்வாறு பதில் கூறலாமா? இந்தப் பதிலில் எந்த அளவுக்கு ஜனநாயகம் ஒழுகுகிறது என்பதை நம் காங்கரஸ் திராவிடத் தோழர்கள் சிந்திக்க வேண்டும்.

மறு நாள் சட்ட சபையிலே தோழர் காரே அவர்கள், ஜவஹர் என் நேற்று இவ்வாறு பேசினார் என்பதற்கு ஒரு காரணமும் கூறியிருக்கின்றார். அதனையும் நம் கா. தோழர்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

"எதிர்க் கட்சியினர் (சட்ட சபையிலுள்ள காங்கரஸ் கட்சி அங்கத்தினர்கள்) மனச்சாட்சியையும் பகுத்தறிவையும் அடகு வைத்து, மெஷின்களைப் போல் வோட்டளிப்பதே என் கருத்துகளுக்கு மதிப்பில்லாததாகும்"

காரே கூறுகின்ற குற்றச் சாட்டுகள்; இன்னும் சில நாட்களில் காங்கரஸ்காரர்களின் வாய்களினாலேயே வெளிப்படையாக வரலாம். அந்தநாள் வெகு தூரத்தில் இல்லை என்பது மட்டும் உறுதி.

## லண்டன் சினிமாக்களில் டெலிவிஷன்.

லண்டனிலுள்ள டெலிவிஷன் நிலயத்திற்கு அதிகச் சக்தி அளிப்பதற்காக மத்திய பிரிட்டனில் இரு புதிய ஒலி, ஒளிபரப்புக்கருவிகள் அமைக்கப்படுகின்றன. இவைகள் அடுத்த வருட ஆரம்பத்திற்குள் வேலைசெய்யத்துவங்கிவிடும். லண்டனிலுள்ள பல பிரபல சினிமாக்களிலும் டெலிவிஷன் புகுத்தப்படவிருக்கின்றன. டெலிவிஷனில் காணக்கூடிய படங்களைப் பெரியதிரைகளிலும் விழும்படி செய்யலாம் என்பதை யுத்தத்திற்கு முன்பு பிரிட்டனில் நடைபெற்ற வெற்றிகரமான பரிட்சைகள் நிரூபித்திருக்கின்றன. ஆகவே இனி லண்டன் வாசிகள் சினிமாக் கொட்டகைகளில் உட்கார்ந்து கொண்டே டெலிவிஷன் மூலம் இங்கிலாந்தில் நடைபெறும் கிரிக்கெட், ஹாக்கி, கால்பந்து முதலிய போட்டிகளைப் பார்க்கக்கூடும்.

## சத்விஷய ஞானம் பரப்பவாம்

மயிலை வாசிகள் ஒரு கழகம் திறந்திருக்கின்றார்கள். அதன் பெயர் மயிலை வைதிக மஹாஜன சபை என்பதாம். இந்தச்சபை ரிஜிஸ்டரும் செய்யப்பட்டிருக்கிறதாம். இதன் நோக்கங்கள்:-

1. ஈசுவரனிடத்திலும், ச்ருதி, ச்மிருதி, புராணங்களிடத்திலும் நம்பிக்கையை வளர்ப்பது.
2. ச்ரௌத ஸ்மார்த்தாதி கர்மாக்களுடைய ஞானத்தைப் பரவச் செய்வது. இவைபற்றி உபன்யாசங்கள் செய்வது.
3. மதப் பிரசாரகர்களை நியமிப்பது.
4. மதப்பிரசாரங்களுக்கான வெளியீடுகள், மதசம்பந்தமான நூல்கள் முதலியவை பிரசுரம் செய்வது என்பனவாகும் என்று கூறப்படுகிறது.

மயிலை வாசிகளின் பரம்பரை, எப்பொழுதுமே இந்த மார்க்கங்களில் அக்கரைகாட்டி வந்திருக்கின்றது. இந்தப் பரம்பரை இதற்குமுன்பு இக் காரியத்திற்குக் கூட்டத்தைக் கூட்டக் கையாண்டுவந்த முறைகளான,

1. வாய்க்குத் தின்பண்டம் வழங்குவது.
2. செவிகளுக்கு இசை வழங்குவது.
3. கண்களுக்குக் கன்னியரின் அழகு விருந்தைப் பறிமாறுவது.
4. மூக்கிற்கு, பல்வேறு பூக்களின் மணத்தையும் சந்தணத்தையும், அத்தரையும் கொண்டு மணம் வீசச் செய்வது.
5. பகலோ இரவோ, காலையோ மாலையோ, என்ற வேறுபாடு இல்லாமல் ஆண் பெண்களைக் கூட்டமாகக் கூடச்செய்து ஒருவரை ஒருவர் நெருக்கி மெய்யின்பம் ஊட்டுவது.

போன்ற செயல்களையெல்லாம், இவர்கள் தாங்களும் கையாளுவோம் என்று வெளிப்படையாக இங்கு குறிப்பிடவில்லை. குறிப்பிடாததன் காரணம், குறிப்பிடாவிட்டாலும் இவையெல்லாம் அதனுள் அடக்கம் என்று எண்ணினாலும் எண்ணியிருக்கலாம்.

மயிலை எல்லாவகையிலும் தயார்; ஆட்டத்திற்கும் பாட்டத்திற்கும் ஆட்கள் பலவுண்டு; எப்பாடு பட்டாவது இந்து மதத்தைப் பரப்பியே தீரும்; என்ற உறுதியை மெய்ப்பிக்க இந்த மகாஜன சபை தோன்றியிருக்கின்றது போலும். மயிலையின் ஆட்டபாட்டங்களில் அதன் அழகின்பங்களிலீடுபட்டுத் திராவிடர்கள் தம்மையும் தம்மினத்தையும் அழித்துக்கொள்ள முற்படார்கள் என்பதை, இன்னும் மயிலை உணரவில்லை என்பதையே இந்நடவடிக்கை காட்டுகின்றதென்று திராவிடர்கள் கருதுவார்களாக.

[5ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த இடத்திலேயே மிதிவண்டிகளும் (பைசைகிள்) மூன்றுஉருளை வண்டிகளும் (டிரைசைக்கிள்) குழந்தைகளுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன. இந்த நிலையம் திறக்கப்பட்டதிலிருந்து 25000 க்கு மேற்பட்ட சிறுவர்கள் இவ்வாகனங்களை உபயோகித்துள்ளனர். கடந்த யுத்தத்திற்கு முன் இங்கு மாதிரி மோட்டார் கார்கள் கூட வாடகைக்குக் கொடுக்கப்பட்டு வந்தன.

இந்த இடம் குழந்தைகளின் பொழுது போக்கிற்கான விளையாட்டு மைதானமாகவும் இருக்கிறது. குழந்தைகளுக்கு ஆர்வம் அளிக்கக் கூடிய கொடை ராட்டினம், ஊஞ்சல் போன்ற பலவகைப்பட்ட விளையாட்டுச் சாதனங்களும் இங்கு உள்ளன. ஒரு விளையாட்டு இடத்திலிருந்து மற்றொரு விளையாட்டு இடத்திற்குக் குழந்தைகள் போக வேண்டுமானால் அவர்கள் மேலே கூறப்பட்ட எல்லாவிதமான பாதைகளையும் கடந்து செல்ல வேண்டும். ஆகவே விளையாட்டின் மூலமாகவே அவர்கள் பாதையில் செல்லும்போது கைக்கொள்ள வேண்டிய விதிகளை அறிந்து கொள்ளுகின்றனர்.

ஆனால் நம் நாட்டிலோ என்றால் பல என்னென்னமோ பெரிய பெரிய - புரியாத - பல திட்டங்கள் போடப்படுகின்றனவே ஒழிய எதிர்கால மக்களை நல்ல முறையில் பயிற்றுவிக்கும் திட்டம் ஒன்றையும் காணோம். என்செய்வது?

உங்களுக்குத் தேவையான
நமது இயக்கப் புத்தகங்கள்
அனைத்தும் எங்களிடம்
கிடைக்கும்.
வியாபாரிகளுக்குக் கமிஷன்
உண்டு.
நாதன் கம்பெனி லிமிடெட்,
ஈரோடு.

# "புறப்படு பகுத்தறிவு பாதையை நோக்கி"

[லால்குடி எஸ். பி. சிவம்]

இசைத்தட்டுப் பேசுங்காலம்; தண்ணீருக்குள்ளே, எண்ணிக்கையற்ற நாள் போர் நடக்கும் காலம்: ஆகாயவிமானம், ஆள் இன்றி, குறிப்பிட்ட இடத்திற்குச்சென்று அணுகுண்டு வீசும் காலம்; கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்த காலம்; மனிதன் தன் பகுத்தறிவினால் மழையை வருவிக்கும் காலம்; ஆயிரம் மைல்களுக்கப்பால் உள்ளவர்களோடு, ஆனந்தமாய் அவர்களுடன் உரையாடிச் செய்தி யறியும் காலம்; மனிதன் மனிதனாய் வாழும் காலம்; பகுத்தறிவின் பாதையிலே பயமின்றி மனிதன் தன் எண்ணப்படி எதையும் 'கடவுள்' இல்லாமல் காரியத்தில் வெற்றியடையும் காலம்.

"ஆம் உண்மை" இந்தக்காலத்திலேயும், ஆண்மையில்லா ஆரியம்; இரக்கமில்லா ஆரியம்; உருக்குலைந்த ஆரியம்; உண்மையில்லா ஆரியம்; உழைப்பாளிகளின் இரத்தத்தை உறிஞ்சி, விலாப்புடைக்க உண்டு களித்து கடவுள் பெயரால் அகப்பட்டதைச் சுருட்டி அந்தரத்துக்கு அழைத்துப்போகும் ஆரியம்; சிறிதும் நாணமின்றிப் பழையபடியே தன் வாழ்க்கையை நடத்த ஆரம்பித்திருக்கின்றது.

ஏ நாதியற்ற ஆரியமே! இன்னும் எத்துணை நாட்கள், உன் உருக்குலைந்த உருவுடன் ஊரூராய்ச் சென்று, திவசம் என்றும், திதி என்றும் பஞ்சாங்கத்தைப் பார்த்து, தர்ப்பையைக்காட்டி உண்டு கொளுப்பாய்?

ஏ மானமற்ற ஆரியமே! உங்களை நயவஞ்சகர்கள் என்றால் நாக்கைப் பிடுங்கிக்கொள்கின்றாயே! உண்மையில் நீங்கள் நயவஞ்சகர்களே. கிடையாது என்று சான்றுகள் தரமுடியுமா? அல்லது நாங்கள் தருகின்றோம் தகுந்த சான்றுகள், நீங்கள் நயவஞ்சகர்கள் என்று. மறுக்கமுடியுமா உங்களால்?

அண்மையில் நடந்த ஜமீன், இனாம் ஒழிப்பு முறையைச் சட்டசபைக்குக் கொண்டுவரும் பொழுது அன்புகலந்த ஆவலுடன் ஏற்றுக்கொண்டாய் ஜமீன் ஒழிப்பை; ஆனால் இனாம்தாரியை ஒழிக்கமட்டும் தடைசெய்து உன் நயவஞ்சகத்தை நாணமின்றிக் காண்பித்துவிட்டாய்.

ஏ, ஆண்மையற்ற ஆரியமே! வாழ்க்கை வீணாய்விடும் என்று வம்பளக்கின்றாய்; மதம் போய்விடும் என்று மாயாஜாலம் செய்கின்றாய்; கொடுமை ஏற்படுமென்று கொந்தளிப்பு அடைகின்றாய்; புரட்சி ஏற்படுமென்று வறட்சி அடைகின்றாய்; தொந்தி குறையுமென்று தொந்திரவு கொள்கிறாய்; அந்தஸ்து போய்விடும் என்று அலறிச் சாகின்றாய்.

ஏ அலறுகின்ற ஆரியமே! உன் நயவஞ்சகத்தை இங்கேயும் நாணமின்றிக் காண்பித்துவிட்டாய்; இனி நடக்காது உன் இஷ்டப்படி. நீ இங்கு கால் வைத்ததிலிருந்து ஊரை ஏய்த்து உண்டாயே அது போதாதா? கோயில்களிலே கூத்தாடி, கடவுள் பெயரால் விதி என்று வீண்பேச்சுப்பேசி, கர்மம் என்று கதையளந்து, தர்ப்பையைக்காட்டித் தனத்தைப்பறித்து, வேதம் என்று விபூதியைக்காட்டி, கடவுள்களுக்கென்று, உன் காமக் கிழத்திகளுக்கு, நகைகளையும், ஆடைகளையும் பூட்டி மகிழ்வித்து இன்ன பிற அடாத செய்கைகள் செய்து நன்றாக உண்டு கொழுத்தாயே! அது போதாதா?

தமிழ்நாட்டுக் கோயில்களிளெல்லாம் தவறாமல் வருடா வருடம், நகைகள், உன் நய்வஞ்சகத்தால் களவாடப்படுகின்ற காரணம் என்ன? சாவியிருப்பது யார் கையில்? தினமும் நீதானே சாமியுடன் சரச சல்லாபமாடுகின்றாய்! பேசுகின்றாய்! அங்ஙனமிருக்க உன்னைத் தவிர வேறு எவர் நகைகளை எடுத்திருக்க முடியும்?

அர்த்தமற்ற அம்மியை மிதிக்கச்செய்யும் ஆரியமே! அம்மன் அணிந்திருக்கும் அட்டிகையில் அடங்கியுள்ள முத்துக்களெல்லாம் அம்மன் கழுத்திற்கு வர எத்தனை உழைப்பாளிகள் தங்கள் உயிரை மாய்த்தார்களோ தண்ணீரிலே! உண்மையில் உனக்கு உழைப்பாளிகளிடத்தே உணர்விருந்தால், கல்தானே என்ற அலட்சியமான எண்ணம் இல்லாதிருந்தால் கடவுளரின் கழுத்திலே காணும் நகைகளைக் களவாடுவாயா?

ஏ மதியற்ற ஆரியமே! கேள்!! மலைபோன்ற மேடு; பக்கத்திலே கடல்போன்ற பள்ளம்; பள்ளத்தை நிரப்பினார்கள் பகுத்தறிவுள்ள தொழிலாளர்கள்; கட்டினார்கள் கண்கவரும்கட்டிடத்தை; பக்கத்திலே கமழும், மகிழ்விக்கும் மலர்ச் செடிகளையும், பழ மரங்களையும் பயிராக்கினார்கள். ஆனால் பலன் என்ன?

மாலையிலே, அந்த மாடியிலே, மகிழ்வுடனே, மலரைப் பறித்துக் கூந்தலிலே குதூகலத்துடன் சொருகி, சில்க் உடைதரித்து சிங்கார நகையணிந்து, பழம் உண்டு பால் அருந்தி, பாட்டிசைக்கின்றார்களே "ஆடுவோமே பள்ளு பாடுவோமே" என்று. அதற்கும், மக்கள் மரத்தடியிலே, உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றிப் பச்சிளங் குழந்தைகளுக்குப் பால் இன்றி, உழைத்து, உழைத்து இளைத்துப்போய் எலும்புக் கூட்டுடன் காட்சியளிப்பதற்கும் எத்தனை வேறுபாடு என்று எண்ணிப் பார்த்தாயா?

ஆடுவாய்; பள்ளும் பாடுவாய்; ஏழை மக்கள் ஏமாந்திருந்தால் ஏறிச் சவாரியும் செய்வாய்!

மடியப் போகும் 'மனு நீதி' ஒன்றையே நினைத்து வருந்தும்' மதத்திமிர் பிடித்த ஆரியமே! இனிமேலாகிலும் மறந்துவிடு மக்களை ஏமாற்றும் வழியை; வேதத்தை விட்டு ஒழி; தர்ப்பையை தூரஎறி; அனுட்டானத்தை ஆழக்குழி தோண்டிப் புதை. பூணுலைப்புறக்கணி; கொழுத்து உன் மனுநீதியை! கொளுந்துவிட்டெரியட்டும்! நெய் இல்லையென்று நினைக்கிறாயா? அறுபது குடம் வேண்டுமானாலும் ஆனந்தத்துடன் தருகின்றோம், அது உயிரோடிருந்தால் எத்தனை

# நாற்பத்திமூன்று கிராமங்கள் நாசமாவதா ?

[தோழர் கே. வி கே. சாமி]

நகரங்களில் அரசாங்கத்தின் நிர்வாகம் திறமையற்ற முறையில், அதிகாரிகளிடத்திலே லஞ்சம் தாண்டவமாடிக் கொண்டிருப்பதுடன் முதலாளிகளின் தொல்லை தலைவிரித்தாடி அட்டூழியங்கள் நிரம்பி மக்களை அல்லல்படுத்திக்கொண்டிருப்பதைக் காட்டிலும், கிராமங்களில் பன்மடங்கு அநீதி தாண்டவமாடி அய்யய்யோ என்ற கூக்குரலைக் கிளப்பிவிட்டது, தற்பொழுது மக்களின் நிலை. அதுவும் வாழ்வதா? மாள்வதா! என்ற அளவிற்குத் தலையின் எழுத்தை நிர்ணயிக்கவேண்டிய அளவிற்கு வந்துவிட்டது.

பொதுப்படையாக நகரவாசிகளுக்கு இருக்கின்ற சௌகரியங்கள் கிராமவாசிகளுக்குக் கிடையாது. ஒவ்வொன்றாக எடுத்துக் கூறினால் ஒன்றல்ல, ஒரு நூறல்ல, ஓராயிரமும் அல்ல, பல ஆயிரம் குறைகளைக் கூறலாம். அவைகள் எல்லாவற்றையும் விட்டு விட்டு, மக்களின் வாழ்வையே செல்லரிக்கக் கூடிய ஒன்றை இரண்டைமட்டும் எடுத்துக் கூறுகிறேன். அதுதான், உண்ணும் உணவு. உணவு உற்பத்தியாகும் இடம் உழைப்பாளிகள் வாழ்ந்துவரும் கிராமங்களேதான். பாழடைந்த நிலங்களைப் பக்குவப்படுத்தி, உழுது, பாத்திகளை வெட்டித் தண்ணீர்பாய்ச்சி, நாத்துக்களை நட்டு, கண்ணை இமைகாப்பது போலப் பயிர்களைக் காத்து, வளர்த்து, களை எடுத்து, பயிர்களை அறுத்து, களத்தில் போய்ச் சேர்த்து, விரித்து, அடித்து, தூசிவேறு உணவுப் பொருள் வேறாக்கி, அளந்து, மூட்டைகட்டி அதைச் சுமந்து, வண்டியில் ஏற்றி, நெற்றிவேர்வை நிலத்தில் விழ அரும்பாடுபட்டு, சேகரிக்கப்பட்ட உணவுப் பொருள் போய்ச் சேருவது, பாடுபட்ட பாட்டாளியின் குடிசைக்கு அல்ல. நாகரிகத்துடன் நறுமணப் பூச்சுடன் ஓரளவுக்காவது சுகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் நகரவாசிகளைப் போய்ச் சேருகிறது. அந்தோ பரிதாபம்.

இப்பேர்ப்பட்ட அல்லல்களைப் போக்கவும் அடிமை வாழ்வை அகற்றவும் தானே, விடுதலைக் கிளர்ச்சி செய்து வந்தோம். வந்ததின் பலனாக, ஏமாற்று அதிகார மாற்றத்தைப் பெற்று ஆட்சியில் அமர்ந்து கொண்டு. சுதந்தரம் பெற்றுவிட்டோம் எனத் தேசீயத் தோழர்கள் கூத்தடிக்கிறார்களே! ஆட்சிப் பீடத்தில் இருந்து கொண்டு எப்படியும் சொல்லித் தொலையட்டும். காங்கரசார் ஆட்சியில், அடிமைப்பட்ட நாட்டில், அவதிப்பட்ட மக்களிடத்தில் தரித்திரம் பொங்கிக் கொண்டல்லவா ஓடிவருகிறது. அன்னிய ஆட்சியில் படாத துன்பங்களெல்லாம் நம்மவர் (தேசீயத் தோழர்கள்) ஆட்சியில் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறதே. இதற்குத் தானா காங்கரசார் பதவி ஏற்றது. நம்மவர் ஆட்சி என்றால், என்ன நேரிடினும் பொறுத்துக் கொண்டுதான் இருக்க வேண்டும் என்பது நியதியா? என்ன நியதி? மக்களைப்பற்றின கவலை இன்றி ஆளும் எந்தச் சர்க்காராக இருந்தாலும் கவலை இல்லை. அதைக் கவிழ்ப்பதே முதல் வேலை.

நகர மக்களுக்குக் கொடுக்கும் அரிசி அளவு, கிராம வாசிகளுக்குக் கிடையாது. ஒரு வாரத்திற்கு நபர் ஒன்றுக்கு $(\frac{1}{4})$ படி நெல் அதாவது $(\frac{1}{8})$ படி அரிசி! என்னே கொடுமை! மக்களை இவ்விதக் கொடுமைப்படுத்தும் அதிகாரவர்க்கத்தைக்கொடும்பாவி கட்டி அடித்தால்தான் என்ன? சரி போகட்டும். உள்ளதையாவது செவ்வனே வினியோகம் செய்கிறார்களா! என்று பார்த்தால் அதுவுமில்லையே. நகரங்களில் உள்ள உணவுப் பிரச்சனைகளை ஓரளவுக்காவது கவனித்து வரும் அதிகாரிகள், கிராமங்களைப்பற்றின கவலையே கொள்ளாதது என்? கிராமவாசிகள் எல்லாம் மானிடவர்க்கத்தில் இருந்து தள்ளுபடி செய்யப்பட்டவர்களா? அரிசி உணவு உண்பதற்கே அருகதை அற்றவர்கள் என்ற அற்பத்தனமான எண்ணமா? நாகரிகமில்லாத நடைப்பிணங்கள்தானே என்ற எண்ணமா? கல்வியற்ற மக்கள்தானே, குறைகளைச் சொல்லி நிவர்த்திக்கவேண்டிய விஷயங்களை எடுத்துச்சொல்ல எவர் இருக்கின்றார்கள் என்ற மதியீனமா? அல்லது நிர்வாகத் திறமையே இவ்வளவு தானா? ஒன்றும் புரியமாட்டேன் என்கிறதே.

அதிகாரவர்க்கம் ஓட்டப்பிடாரம் பிர்க்காவைப் போய் சுற்றிப் பார்க்கட்டும் (43) நாற்பத்திமூன்று கிராமங்களிலுள்ள நிலையை எண்ணிப்பார்க்கட்டும். மக்களின் வாழ்க்கைத்தரம் எப்படி இருக்கிறது என்பதைச் சிந்திக்கட்டும். பின் கூறட்டும். எப்படி என்று. ஓட்டப்பிடாரம் பிர்க்காவை நினைத்தாலும் நெஞ்சம் பதறுகிறதே. அங்கு வாழும் மக்கள் அரிசி உணவு (நவதானியம்) உண்டு நாள் இருபதாகி விட்டதே. அவர்களுக்குரிய பங்கீட்டு முறையையாவது ஒழுங்காக வினியோகம் செய்கிறார்களா? என்றால் அதுவுமில்லையே! எந்த அதிகாரிகளாவது ஓட்டப்பிடாரம் பிர்க்கா போய் நிலைமையை அறிந்து பார்த்தார்களா! என்று பார்த்தால் அதுவுமில்லையே? சுமார் 20 நாட்களாக அங்கு வாழும் மக்கள் பயறுகளை அல்லவா உணவாகக் கொள்கிறார்களாம்! இன்னும் இதை எவ்வளவு நாளைக்குத்தான் சாப்பிட்டுக்கொண்டு வாழமுடியும்! ஏ! அதிகார வர்க்கமே! ஈவு இரக்கமற்ற அதிகார வர்க்கமே! அலட்சிய புத்தியை உடைய அதிகாரவர்க்கமே! நீங்கள் இருப்பது மக்களுக்காகத்தானே ஒழிய உங்களுக்காக மக்கள் உயிரோடு வாழவில்லை. அவ்விதப் பொறுப்பு வாய்ந்த இடத்தில் அமர்ந்து கொண்டு மக்களைப்பற்றின கவலையே கொள்ளாமல் இருந்தால் என்ன நேரிடும் தெரியுமா? மக்களுக்கு வறுமை அதிகரிக்க அதிகரிக்க, அதன்மீது வேதனை வளரவளர, அந்த வேதனையிலே இருந்து கிளம்பும் உணர்ச்சி இருக்கிறதே, அது அதிகாரப் பீடத்தையே நோக்கிப் பாயும் என்பதை மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். இவ்வித இன்னல்களுக்கு உள்படாது மக்களின் குறைகளைக் கவனியுங்கள்.

வறுமை மட்டுமல்ல. பிணியும் ஓட்டப்பிடாரம் பிர்க்காவில் பரவி விட்டதாம்! புதியம்புத்தூரில் காலராவாம்! அன்றாடம் ஒன்று இரண்டு என இவ்வுலகத்தை விட்டுப் பிரிந்து விடுகிறார்கள். இந்தத் தகவலை மாவட்டச் சுகாதார அதிகாரிகளுக்குத் தந்தி மூலம் தெரிவித்தும் இதுவரையிலும் அந்நோயைத் தடுக்க ஒரு முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை என்றால், அதிகார நிர்வாகம் எந்த லட்சணத்தில் நடக்கிறது என்பது தெரிகிறதே. நம்மைக் கேள்வி கேட்பார் யார் என்ற எண்ணம் தானே! தகவல் தெரிவித்தும் அதிகாரிகள் வாளா இருப்பதின் மர்மம். அதிகாரிகளுக்குள் ஒருவருக்

---

குடம் விழுங்கக் காத்திருக்கின்றதோ?

"புறப்படு பகுத்தறிவுப் பாதையை நோக்கி" முன்னேற்றத்திற்கு வர முணு முணுக்காதே. எங்கும் மக்கள் மங்களமாய் வாழ மகிழ்வுற்றிருக்க, இங்கிதத்துடன் எங்கள் பெரியார் வழியைப் பின்பற்று. வெற்றியடைவாய். வாழ்க எமது வளமார் திராவிடம்.

# ருஷ்யாவில் சீட்டாட்டம்.

## காசுக்காக அல்ல, கருத்துக்காக.

எல்லா மதங்களும் ஒழிந்துவிடவேண்டுமென்பதே ருசிய அரசாங்கத்தின் கருத்தென அன்பர்கள் அறிவர். ஆகவே மதமொழிக்கும் பிரசாரம் செய்ய அந்நாட்டில் ஒரு நூதனவழி கண்டுபிடிக்கப்பட்டு நடந்து வருகின்றது. அதாவது இப்பொழுது அத்தேசக் கடைகளிலெல்லாம் ஒரு புதிய வகையானசீட்டுக்கட்டுகள்விற்கப்படுகின்றன. இக்கட்டிலுள்ள சீட்டுகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மதத்தை தூஷித்து சித்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 'ஆடுதன்' என்று நாம் வழக்கமாகச் சொல்லும் சீட்டுகளில் ஒரு ரோமன் கத்தோலிக் பாதிரிமார் ஒரு பெண் மீது காமங்கொண்டு நினைத்து உருகுவதுபோன்ற படமிருக்கின்றது. டய்மன் சீட்டுகளில் யூதர்களது மதச்சடங்குகளைக் கேலி செய்யும் படம் வரையப்பட்டிருக்கிறது. ரஷியாவிலுள்ள கிருஸ்தவ மதத்தைப் பழிக்குஞ் சித்திரம் ஸ்பேட் சீட்டுகளிலும், கீழ்நாட்டு மதங்களையும், புத்த மதத்தையும் எள்ளி நகையாடும்படம் 'கிளாவர்' சீட்டுகளிலும் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன.

மத இருளால் மக்கள் அல்லலுற்றதையும், நாஸ்திகத்தால் அவர்கள் இனி க்ஷேமமடைய விருப்பதையும் காட்டும் வகையில் 'ஆஸ்' சீட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இச்சீட்டின் ஒரு பாதியில் காட்டுமிராண்டி வேஷங்கொண்டவர்கள் தம்பட்டம் அடித்து, தம் மதக்கொள்கையை ஏற்காதவர்களைத் தண்டிக்க சவுக்குகளும், கழுமரங்களும் தயார்செய்வது போலும், இன்னொரு பாதியில் விஞ்ஞான சாஸ்திரச் சின்னங்களான இயந்திரங்கள் முதலியனவும், பள்ளிக்கூடங்கள் விளையாட்டுக் கருவிகள் இவைகளைக் குறிக்கும் பொம்மைகளும் இருக்கின்றன. இச்சீட்டின் ஒரு முனையில், "முன் அவ்வாறு இருந்தது" என்றும், இன்னொரு முனையில் "இனி இங்ஙனமிருக்கும்" என்றும் எழுதப்பட்டுளது. சீட்டுகளின் பின்புறத்தில் விகார உருக்கொண்ட ஒரு பேய் மாபாவம் செய்தவர்களின் ஆத்மாக்களைக்கொண்டு நரகத்துக்குச் செல்வதுபோன்ற சித்திரம் இருக்கின்றது.

---

கொருவர் தங்கள் நிர்வாகத்தை ஒழுங்காக ஓட்டிச் செல்லாது வேலை வாங்காது, கவனியாது, கண்டியாது, இருந்து கொள்ளலாம்! ஆனால் அப்பேர்ப்பட்ட நிர்வாகத்தை மக்கள் கவனிக்க முற்பட்டால் நிலைமை மோசமாகி விடுமோவென அஞ்சுகிறேன். அதற்கு இடம் வைத்துக் கொள்ளாது அம்மக்களுக்கு ஆவன செய்ய முற்படுங்கள்; என அரசாங்க அலுவல்தாரர்களுக்குத்தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன்.

---

[2ம் பக்கத் தொடர்ச்சி]

லை பெற்றால்தான், இந்தச் சிறையை ஒழித்தால்தான், பருவமடைந்த பெண்களை வைத்துக் கொண்டு ஒரு பெரும் பாராங்கல்லைச் சுமந்து கொண்டிருப்பது போலக் கவலைப்பட்டுக் கிடக்கும் பெற்றோர்களின் கவலை நீங்கும்.

பரிசீலனை செய்யும் முறை பெண்களுக்குத்தான் கொடுக்கப்படவில்லை; ஆண்களுக்காவது கொடுக்கப்படுகிறதா என்றால், அப்படியும் இல்லை. [ஆண்களுக்கு அந்தமுறை உண்டென்றாலே பெண்களுக்கும் உள்ளது போலத்தானே] பெண்களைப்பற்றிச் சிறுவயதிலிருந்தே விகற்பமான எண்ணமுண்டாகும்படி ஆண்களைப்பழக்கப்படுத்தி, பெண்ணென்றால் ஒரு இன்பத்திற்குக் கருவிப் பொருள் என்ற எண்ணத்தைப் பெருக்கி வளர்த்துவிட்டு, விவாகமாகிற வயது வந்தவுடனே ஆணின் பெற்றோர்கள் ஆணையும் அழைத்துக் கொண்டு பெண் பார்க்க வருகிறார்கள். இதற்குப் பெயர்தான் மாப்பிள்ளை நேரில் பெண்ணைப் பார்த்து விரும்பிக் கலியாணம் செய்து கொள்ளுகிறது எனச் சொல்லப்படுகிறது. உண்மையில் என்ன நடக்கிறது?

விவாகமாகாத வாலிபர்கள் தங்கள் பெற்றோர்களின் இஷ்டப்படி ஒரு வீட்டில் அடைபட்டுக் கிடக்கும் பெண்ணைப் பேரம் பேசுவதற்கு, முன்னாலேயே அறிவித்தோம் குறிப்பிட்டுப் பெற்றோர்களுடனோ, அல்லது மற்றவர்களுடனோ வருகிறார்கள் என்பதைத் தெரிந்த பெண்ணின் பெற்றோர்கள், "இந்தப் பாரம் எப்படியும் நம்மை விட்டு நீங்கிவிடவேண்டுமே என்ற ஒரே எண்ணத்தால், விதவிதமாகப்பெண்ணைச்சிங்காரித்து, அழகிய ஆடை ஆபரணங்களையணிந்து நன்றாக ஜோடித்து ஒரு அறையிலிருந்து இன்னொரு அறைக்குப், பெண்ணைப்பார்க்க வந்தவர்கள் பார்ப்பதற்காகப் போகச் சொல்லுகிறார்கள். இந்தக் காட்சி அந்த நேரத்தில், வெளியுலகைக் காணாத ஆண்களுக்குக் கொஞ்சம் கவர்ச்சியாகத்தானே தோன்றும். (இங்குதான் ஆண்களைச் சமுதாயம் நன்றாக ஏமாற்றிக் கொண்டு வருகிறது. பெண்களுக்காவது வெளிச்செல்லும் உரிமையே இல்லைஎன்று ஒரேயடியில் மறுக்கப்படுகிறது. ஆனால் உரிமை கொடுக்கப்படுகிறது என்ற பெயராலே ஆண்களுக்கு ஏமாற்றப்படுகிறது) வாலிபனும் தன் வாழ்க்கைக்கு ஏற்ற ஜோடிதான் எனத் தோற்றத்தை—அதுவும் பொய்த் தோற்றத்தைய்—பார்த்து உறுதிசெய்துவிட்டுப் பெற்றோர்களுக்குக் கூறிவிடுகிறான். பிறகு வாழ்க்கையில் இவளின் குணாதிசயங்களைத் தெரிந்துகொள்ளாமல் மணஞ்செய்துகொண்டு விட்டோமே எனச் சஞ்சலப்படுகின்றான்.

ஒரு தார மசோதா நிறைவேறி அமுலுக்கு வரவிருக்கும் இந்தக் காலத்தில், ஆண்கள் இனி அதிக எச்சரிக்கையாக ஏமாறாமல் இருப்பார்கள் என நினைக்கின்றேன். ஆடவர்கள் முற்படாவிட்டாலும் பெண்கள் கண்டிப்பாக முற்பட்டே தீரவேண்டும். அவ்வாறு முற்பட்டால்தான், மனவேதனையில்லா மாண்புடைய இல்வாழ்க்கை நாட்டில் நடைபெறும்.

---

### முக்கிய அறிவிப்பு

ஏஜண்டுத் தோழர்கள் ஒவ்வொருமாதமும் 10உக்குள் அந்தந்த மாதப் பட்டியல் தொகையைக் கண்டிப்பாய் அனுப்பி வைத்து விடவேண்டும்.

சந்தாதாரர்களும், ஏஜண்டுகளும் கடிதம் எழுதுங்காலங்களில், அவசியம் அவரவர்கள் நம்பரைக் குறிப்பிட்டு எழுதவேண்டும்.

மானேஜர்.

---

### தாய்மார்களே கவனியுங்கள்

தீபாவளி, கார்த்திகை முதலிய இழிவைத் தரும் பண்டிகைகளைக் கொண்டாடாத தாய்மார்கள்:-

பெரியமேடு சுப்பம்மாள்.

துறையூர் ஆர். ஆண்டாளம்மையார்.

---

## காவித்துணியே கள்ளர்க்கறிகுறி!

## வேளாள சமூகச் சீர்திருத்தச் சங்கம், நாமக்கல்

இராமாபுரம்புதூர் 6—12—47

இன்று பிற்பகல் 3 மணிக்கு ஷை சங்கக் கூட்டம் நாமக்கல் இராமாபுரம் புதூரில் தோழர் பி. எஸ். நஞ்சப்பக் கவுண்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நாமக்கல், திருச்செங்கோடு, இராசீபுரம் முதலிய தாலூகாக்களிலிருந்து சுமார் 200 பேர்களுக்கு மேல் முக்கிய மானவர்கள் வந்திருந்தனர். பெண்களும் ஏராளமாக வந்திருந்தனர்.

அதுபோது இராமாபுரம் புதூரில் ஒரு கிளைச் சங்கம் (வேளாள சமூக சீர்திருத்தச் சங்கம்) ஏற்படுத்தப் பட்டது. தோழர் சோமசுந்தரக் கவுண்டர் அவர்கள் (பேளுக்குரிச்சி) மேழிக் கொடியை யேற்றிவைத்தார்கள்.

பிறகு 23-11-47 நாமக்கல்லில் பழையகோட்டைப் பட்டக்காரர் ந. நல்லசேனாதிபதிச் சர்க்கரை மன்றாடியார் அவர்கள் தலைமையில் நடந்த மாநாட்டு 12வது தீர்மானத்தின்படி பள்ளிக்கூடம் கட்டவும், உணவு விடுதி கட்டவும் நிதி திரட்ட பிர்க்கா வாரியாக செயற்குழு அமைக்கப்பட்டது.

கூடிய விரைவில் மோகனூரில் ஒரு கூட்டம் கூட்டி நிதி வசூலுக்குப் புறப்படுவதெனவும் முடிவு கட்டப்பட்டது.

அதுவரை எல்லாப்பொறுப்புக்களையும் தோழர் பி. எஸ். நஞ்சப்ப கவுண்டர் அவர்களும் தோழர் கா. கருப்பண்ணன் அவர்களும் ஏற்று நடத்தக்கேட்டுக்கொள்ளப்பட்டது.

தோழர் எம். இராமசாமி அவர்கள் நன்றிகூறக் கூட்டம் மாலை 6 மணிக்கு இனிது முடிவுற்றது.

## வானவூர்தியில் மணவிழா.

ஷாங்காய் என்ற (சீனா) ஊரில் வழக்கமாய் நடந்து வரும் முறைக்கு மாறாகச் சீனக் காதலர்களுக்கு வானவூர்தியிலேயே மணம் நடைபெற்றது. மணவிழாவின்போது வானவூர்தி 4000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது.

26 வயதான மிஸ் லிடானுக்கும் பருத்தி வியாபாரியான சியாங்லுங் ஷானுக்கும் தான் இம்முறையில் மணம் நடந்தது. மணத்தின்போது, இசை அவசியம் என்பதற்காக ரேடியே பலமாக முடுக்கி விடப்பட்டது. வானவூர்தியிலேயே 20 விருந்தினர்கள் தங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்தனர் என்று ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

**எப்படியிருக்கிறது இந்தமணமுறை?**


## குடி அரசு விளம்பர விகிதம்.

| பக்க விபரம். | ஒப்பந்தமல்லாதது | ஒப்பந்தம் செய்துகொண்டது. 6-மாதங்களில் | | ஒரு வருஷத்தில் | |
|---|---|---|---|---|---|
| | ஒரு முறை | 13முறை | 26முறை | 26முறை | 52முறை |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| கடைசிப் பக்கம் | 60 | 50 | 40 | 45 | 35 |
| உள் பக்கம் | 50 | 45 | 35 | 40 | 30 |
| ஷை அரைப் பக்கம் | 30 | 27 | 20 | 25 | 18 |

ஒப்பந்தமல்லாத விளம்பரம் ஒரு கலம் 1-அங்குலத்திற்கு ரூ. 3/-

ஒருவருட காலத்தில் உபயோகிக்கவேண்டியது.

50லிருந்து 149 அங்குலங்கள் வரை ரூ. 2
150 ,, 249 ,, ரூ. $1\frac{3}{4}$
250ம் அதற்குமேலும் ,, ரூ. $1\frac{1}{2}$

கடிதமும் பணமும் கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பவேண்டியது.

மானேஜர், "குடி அரசு" ஈரோடு.


## 150 காங்கரஸ் கைதிகள் உண்ணாவிரதம்

ஹைதராபாத் சிறைக் கூடத்தில் உள்ள 150 ராஜீயக் (காங்கரஸ்) கைதிகள் உண்ணாவிரதமிருந்து வருகின்றனர். சில நாட்களாகத் தங்களை பி. வகுப்பிலிருந்து ஸி. வகுப்புக் கைதிகளாக மாற்றி நடத்துவதை ஆட்சேபித்து இந்த உண்ணாவிரதம் செய்யப்படுவதாகும் என்று கூறப்படுகிறது.

வெளியிலே இந்தச் சோம்பேறிகளுக்கு உணவு கிடைக்கவில்லை; சாப்பாட்டிற்குக் கஷ்டமாயிருக்கிறதே என்ற கருத்தால் இந்த அண்ணாத்தைகள் ஜெயிலுக்கு வந்தவர்கள்; இவர்களுக்குத் தேசீய உணர்ச்சியாவது மண்ணாங்கட்டியாவது; என்ற போக்கில் அகம்பாவ ஆணவத்தின் சிகரமான ராஜன், பால் இல்லாமல் ஜெயிலுக்கு வந்தவர்கள் என்று இந்தி எதிர்ப்புக் காலத்தில் தாய்மார்களைப் பழித்தது போல நாம்ஒன்றும் இப்பொதுசொல்லவில்லை.

ஆனால் மந்திரிகளை... மக்களாட்சியைக் காண வேண்டும் என்று பேசி அதற்காகப் பாடுபட வந்த இந்த மாவீரர்கள், எதற்காகப் பட்டினி கிடந்து சாகிறேன் என்கிறார்கள்? இவர்களின் உண்மையான நோக்கமென்ன? ஜெயிலிலே சுகமாக இருக்கலாம் என்றா சென்றார்கள்? என்று பொது மக்களில் சிலராவது நினைப்பார்களே என்பதையே இவர்களுக்கு நாம் நினைப்பூட்டுகின்றோம்.




Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.